ஆசிரியர் :
கா. சி. வேங்கடரமணி

காரியாலயம் :
43, மஹாதானத்தெரு, மாயவரம்.

மாத வெளியீடு

மாலை 8	DECEMBER 1942 :: சித்திரபானு ஞு மார்கழி மீ	முத்து 6

பொருளடக்கம்

			பக்கம்
1	போகிற போக்கில்	மணி	246
2	என் கனவு	கா. சி. வேங்கடரமணி	248
3	உதிர்ந்த மணிகள்		251
4	ஸ்ரீ ரமண கானம்	சுவாமி சுத்தானந்த பாரதியார்	252
5	சாமானிய விஷயங்கள்	ஸர். டி. விஜயராகவாச்சாரியார்	253
6	கூட்டங்களின் மனதைக் கொள்ளைகொண்டவர்	வே. ரா. சுந்தரராமன்	256
7	கண்ணிருந்தோர்	ரா. சந்திர சூடன்	261
8	ஆண்பிள்ளைச் சார்த்து	ஏ. டி. கிருஷ்ணமாச்சாரி	265
9	கிராமாந்தரம்	டி. என். எஸ்.	272
10	நான் கண்ட கவிதை	சுப்ரமண்ய சாஸ்திரி	278
11	ஐ. நா. வி கார்ப்பொரேஷன்	ஜே. ஸி. குமரப்பா	292
12	கிருமிகள் தொல்லை		294

"பாரதமணி"யில் வெளியாகும் கட்டுரைகள், கதைகளில் வெளிவரும் பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; ஒருவரையும் குறிப்பிடுவனல்ல.

போகிற போக்கில்



இந்த மாதமும் 'போகிற போக்கில்' எழுதாமல் தப்பித்துக் கொள்ளலாம் என்று எண்ணினேன். ஆனால் அதை ஸர். ஸி. பி. ராமஸ்வாமி ஐயர் தடுத்து விட்டார். என் நண்பர் ஸ்ரீ டி. எம். கிருஷ்ணஸ்வாமி ஐயர் திருவாங்கூர் பிரதம நீதிபதியாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

திருவாங்கூருக்குச் சமீபத்தில் ஏற்பட்டிருக்கிற பல பாக்கியங்களில் இதுவும் ஒன்று. நல்ல வஸ்துக்களைப் பொறுக்கி யெடுத்து ரஸிக்கும் திறமை வாய்ந்தவர் ஸர். ஸி. பி. ராமஸ்வாமி ஐயர். அவர் ஸ்ரீ கிருஷ்ணஸ்வாமி ஐயரைப் பொறுக்கி யெடுத்ததில் ஆச்சரிய மென்ன?

கர்மாவைப் பக்தியுடன் செய்தவனை ஈசன் கைவிடார் என்பதற்கு ஸ்ரீ டி. எம். கிருஷ்ணஸ்வாமி ஐயரின் நியமனமே பெரிய சாக்ஷி.

ஸ்ரீ கிருஷ்ணஸ்வாமி ஐயர் உண்மையான பக்தர். சாந்தவழியைத் தேடுபவர். தொட்ட காரியத்தை நிஷ்காம்யமாகச் செய்வதில் எண்ணமுடையவர். அவரிடம் நான் ஓர் உயர்தர குணம் கண்டு களித்திருக்கிறேன். அகம்பாவமில்லாதவர். தாம்தான் எல்லா விஷயங்களிலும் கரைகண்டுவிட்டோம், பிறருக்கு ஒன்றும் தெரியாதென்று ஹைகோர்ட்டில் நடைபோடும் லீடர்'களில் இவர் ஒருவரல்ல. ஜூனியர் வக்கீல்களை மரியாதையுடன் நடத்துபவர். விசாலமான நோக்கமுள்ளவர். பொறுமையுள்ளவர். காக்கத் தெரிந்தவர். தம் வழிக்கு வேறுபாடானவர்களைக் கண்டித்துப் பிரசாரம் செய்யும் பழக்கத்தில் ஈடுபட்டவரல்ல. தம்முடைய மனது பரிபக்குவம் அடையவேண்டும், பேரின்பத்தை பெறவேண்டும், குறைகள் நீங்க வேண்டும், என்று ஈசனைப் பிரார்த்தித்துப் பக்தி செய்கிறவர். காமகோடி பீடத்தில் இப்பொழுது ஜகத் குருவாய் விளங்கிவரும் மகானுடைய அனுக்கிரஹத்தையும் அன்பையும் பெற்றவர். சிலத்தாலும், செயலாலும் வாழ்வை மேன்மைப் படுத்த வேண்டுமென்ற கருத்துக்கொண்டவர். இவர் இந்த முப்பது வருஷ காலம் பேரும் புகழும் இருந்தும் அரசியல் துறையில் இறங்காதது ஒரு குறையென்று நான் சில சமயங்களில் கருதினாலும், அதுவே அவரிடமுள்ள ஒரு அபூர்வமான குணத்தையும் காட்டுகிறது.

* * *

ஸ்ரீமான் கிருஷ்ணஸ்வாமி ஐயருக்கு என் வேண்டுகோள் ஒன்றுதான். ஸம்ஸ்கிருத மறுமலர்ச்சிக்கும் தமிழ் இலக்கியத்திற்கும், கீதத்திற்கும், தேசீயக் கல்விக்கும், ஸநாதன தர்ம அபிவிருத்திக்கும், தம் ஊதியத்தில் பாதியைச் சேமித்து வைத்து, அவற்றுக்கு வேண்டிய தக்க ஸ்தாபனங்களைச் சீக்கிரத்தில் ஏற்பாடுசெய்ய வேண்டும். ஏனென்றால், இந்த அடிமை நாட்டில் சொல் மூலம் பயன் இல்லை. செயல் மூலம்தான் புத்துயிர் பிறக்கவேண்டும்.

கொஞ்ச வருஷங்களுக்கு முன் நான் பெங்களூரில் மகாத்மா காந்தியைச்

சந்தித்தபோது அவர் என்னைக்கேட்டார்: "சென்னைக் கோர்ட்டுகளில் எவ்வளவு வக்கீல்கள் இருக்கிறார்கள்?" என்று.

"இரண்டாயிரம் வக்கீல்கள்!" என்று எண்ணிக்கைப் பெருமையோடு சொன்னேன்.

"ஆளுக்கு வருஷத்திற்கு ஒரு ரூபாய் தியாகம் செய்து இந்த கோடம்பாக்கம் ஹரிஜன் இண்டஸ்டிரியல் பள்ளிக்கூடத்தை நடத்தக்கூடாதா?" என்று கேட்டார்.

"வக்கீல்களுக்கு வாங்கித்தானே பழக்கம்?—தப்பினால், சில்லரையாகக் கண்டபடி கொடுப்பதுதானே பழக்கம்? ஒன்று கூடி ஆலோசித்து ஒரு தேசிய ஸ்தாபனத்தை ஏற்படுத்தி அதை நன்றாக நடத்தவேண்டுமென்கிற ஒற்றுமை எண்ணம் இன்னும் பிறக்கவில்லையே!" என்று சொன்னேன்.

வி. கிருஷ்ணஸ்வாமி ஐயர், ஸர். பி. எஸ். சிவஸ்வாமி ஐயர் (ஸர். பி. எஸ். சிவஸ்வாமி ஐயரைப் போன்ற உத்தம புருஷரை நான் கண்டதே இல்லை. அவர் சோழநாட்டுக்கு ஓர் திலகம். நமது நாகரீகத்திற்கே ஓர் பெருமை) இவர் இருவர்களைத்தவிர தாம் தாமாகவே யோசித்துக் காலகதியையும் அநுசரித்து தர்ம ஸ்தாபனங்கள் வக்கீல்களில் செய்தவர்கள் மிக்கக் குறைவு. வக்கீல்களின் அகடவிகட சப்பாத்தியத்திற்கு தர்ம ஸ்தாபனங்கள்தான் ஒரே மாற்று. தினசரி பீஸ் ரூபாய் ஆயிரம் வாங்கும் 'அபிடவிட்' ஏகாதிபத்தியத்திற்குள் பிரிட்டிஷ் ஏகாதிபத்திறம்உறைபோடக் காணாது.

ஸ்ரீமான் டி. எம். கிருஷ்ணஸ்வாமி ஐயரின் உயர்தர வாழ்வின் பூர்த்திக்கு ஒரு சாச்வதமான தர்ம ஸ்தாபனத்தை தம் மனம்போல் நிர்மாணம் செய்து வளர்க்கவேண்டியதுதான். இதற்கு அவர் பதவி முடியும் வரையில் ஐந்து வருஷம் காக்கவேண்டாம் உடனே ஆரம்பிக்க வேண்டும். இதுதான் என் வேண்டுகோள். சொல் என்பது ஒரு கட்டுச் சுள்ளிபோல். அதைச் செயல் என்னும் பொறியால் தீயிட்டால் தானே ஜ்வாலைவிடும்; நமது தேசத்திற்குப் புத்துயிர் உண்டாகும்?

காவேரிப்பூம்பட்டினம்
18—12—42

மணி

என் கனவு

கா. சி. வேங்கடரமணி

அத்தியாயம் 2.

என் இளமைப் பிராயம்: விளையாட்டும் வேடிக்கையும்

நான் செல்லப் பிள்ளையாய் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்ந்துவந்தேன். குடும்பத்திற்கு ஒரே பிள்ளை. கேட்கவேண்டுமா? நான் வைத்தது சட்டம். இன்றைக்கும் ஒரு வழியில் அப்படியே செல்லப் பிள்ளையாய்த்தான் வளர்ந்து வருகிறேன்—யந்திரத்தைப் போன்ற இல்லற வாழ்க்கையில் அரைக்கப்பட்டும், வேப்பிலையைத் தின்னக் கூலியும் உண்டோ என்று சொல்லிக்கொண்டு செல்லப் பிள்ளையாய்ப் பிறர் வம்பைக் காது கொடுத்துக் கேளாமல், காலம் கழித்து வருகிறேன்—கஷ்டந்தானே உண்மையில் கரும்பு! வேப்பிலைதான் கரும்பு—பேரின்பத்திற்கு!

செல்லப் பிள்ளைக்கு சொர்க்கம் அன்னையின் மடியும், அன்புந்தானே! அன்பே உருவாய்த் தரித்த என் தாய் என்னிடம் காட்டிய அன்புக்கு அளவே கிடையாது. என் அன்னையின் ஜீவ காருண்யத்திற்குக் கங்கு கரையில்லை. தானே படரும் காட்டுக் கொடியைக் கூடக் கழிநாட்டி வளர்ப்பவள். வண்டியில் போகும்போதுகூட உடம்பைத் தரித்துச் சரிவர உட்காரமாட்டாள்—மாட்டுக்குப் பாரம் கூடிப்போகுமோ என்ற பயம்! மாட்டைத் தட்டியோட்டக்கூடச் சம்மதிக்க மாட்டாள். இப்படிப்பட்ட தாயை என் இளம் வயதில் நான் பாடாகப் படுத்தினேன் என்பதில் ஒரு அதிசயமில்லை.

"சாப்பிடமாட்டேன்–ஒரு மான்குட்டியைக் கொண்டுவா, சாப்பிடுகிறேன்" என்பேன். அல்லது உப்பளத்தில் திருட்டு மேய்ச்சல் மேயும் ஒரு ஆட்டுக் குட்டியையாவது ஜவான் கரியனை விட்டுப் பிடித்துக்கொண்டு வரவேண்டுமென்று பிடிவாதம் பிடிப்பேன். ஆட்டுக் குட்டிகூடக் கிடைக்காவிட்டால், ஒரு நாய்க்குட்டியாவது வேண்டுமென்று அழுவேன். எனக்காகவே கரியன் தன் வீட்டில் சில நாய்க்குட்டிகளை வைத்து வளர்த்துக்கொண்டிருந்தான். நாய்க் குட்டியின் அழகிய சிறு காதை காதல் கொண்டவன்போல் கிள்ளுவேன். அது வீரிட்டுக் குலைக்கும். கத்தும் வாயை மூட ஒரு கை பாலும்சோற்றை வெள்ளிக்கிண்ணியிலிருந்து எடுத்து வாரி இறைப்பேன். "வேண்டாண்டா குழந்தாய்," என்று என் தாயார் முறையிடுவாள். குழந்தையின் சுறுசுறுப்பையும் விஷமத்தையுங் கண்டு அவள் முகத்தில் ஆனந்தக் கண்ணீர் ததும்பும்.

2

ஏழாவது வயது வரையில் பிறந்த மேனியிலேயே வளர்ந்தேன். குக்கிராம வாசந்தானே! தவிர நாகரிகமும் பரவ

வில்லை. சிறுவயது முதல் ஆடையிலும் ஆடம்பரத்திலும் ஒருநாளும் எனக்கு ஆசையில்லை. இளம் பிராயத்தில் காஞ்சிபுரம் பட்டுவேஷ்டியைக்கட்டி பில்ட்டை போட்டு தலையைவாரி என் தாய் என்னை அலங்கரித்து விட்டால், குடுகுடுவென்று நான் கொல்லைப்பக்கம் ஓடிப்போய்ப் பட்டு வேஷ்டியையும், பில்ட்டையும் அவிழ்த்து குப்பை மேட்டில் வாரி எறிந்து தலைப் பின்னலையும் அவிழ்த்து கலைத்துக்கொண்டு, வாசலில் போய் கன்றுக்குட்டிகளைத் துரத்திக்கொண்டு வாயுவேகமாய் ஏரிக்கரைக்கு ஓடிப் போய்விடுவேன்.

தட்டாரப் பூச்சியைப் பிடிப்பேன். இறகைப் பிய்த்தெறிந்தால் தேவலை போலத் தோன்றும். ஆனால் என்னையறியாமல் இரக்கம் வந்து அந்த தட்டாரப்பூச்சியை விட்டுவிடுவேன். தூக்குப் போட இருக்கும் கைதிகள் ஜெயிலிலிருந்து தப்பியோடுவதுபோல அவைகள் ஓடும்.

கட்டெறும்புகளைப் பிடித்து கங்காள ஜலத்தில் போடுவேன். "பாவம்! போடாதே" என்று தாய் கூவுவாள். "பாவமில்லை அம்மா! எறும்புகளுக்கு நீஞ்சப் பழக்குகிறேன்" என்பேன்.

அப்படியே அவைகள் கங்காள ஜலத்தில் நீஞ்சவும் நீஞ்சும்; சளைக்கும்; களைக்கும்; தத்தளிக்கும்; அந்தப் பிராணபத்து சமயத்தில் ஒரு ஈர்க்குச்சியைக் கொண்டுவந்து கங்காளத்தில் போடுவேன் விதியிருந்தால் இந்தக் கட்டுமரத்தில் ஏறித் தப்பித்துக்கொள்ளட்டும் என்று நினைப்பேன். அதன்மேல் அவைகள் நின்று கொஞ்சம் களையாறும் சிந்திக்கும். நானும் இந்த 'இன்டோர்' விளையாட்டில் சற்று அலுத்துப்போய் நீண்ட ஈர்க்கு ஒன்றைக் கங்காள ஜலத்தில் விட்டு அவைகளைக் கரையேற்றுவேன். நான் செய்த பாபத்திற்காக, ஒரு கட்டி கற்கண்டையோ, ஒரு சொட்டுத் தேனையோ அவைகளின் வாயில் சொட்டுவேன்.

'குழந்தை ஈ பிடிக்கிறானே!...." என்று மகிழ்ச்சியுடன் கம்பீரமான குரலில் கேட்டுக்கொண்டு என் தந்தை பனந்தோப்புகளையும், கள்ளுக்கடைகளையும் சுற்றிப்பார்த்து சோதனைசெய்துவிட்டுச் சோர்ந்து முகம்வாடி, என்னைக்கண்டதும் களித்து உள் நுழைவார். மறுபடியும் சாப்பிடப் படுத்துவேன். கிளியைக் கொண்டுவா, மயிலை கொண்டுவா, யானையைக் கொண்டுவா, என்று வாய் மூடாமல் . கேட்பேன். அந்த ஊரில் எருமை மாடுகூட அகப்படாது!

நான் இளம்பிராயத்தில் செங்கற்பட்டு வடஆற்காடு ஜில்லாக்களில் பல குக்கிராமங்களில் என் தாய் தந்தையர்களுடன் திரிந்து இருந்ததால் காடுகளும் காட்டாறுகளும், மலைப்பிரதேசங்களும் கூடிய பல காட்சிகளைப் பார்த்து ஏகாந்தமாய் அநுபவித்து ஆனந்தப் பட்ட ஞாபகம் இன்னும் என் மனதிலிருந்து மறையவில்லை. இளமையில் நான் வளர்ந்த குக்கிராமங்களை மறுபடியும் இப்பொழுது போய்ப் பார்க்கவேணும் என்ற அவா கொண்டிருக்கிறேன். 'பாரதமணி' இடம்கொடுக்குமோ என்று அச்சப்படுகிறேன்.

முக்கியமாய் மூன்று விளையாட்டுகள் எனக்கு எப்போதும் பிடிக்கும். அவை இன்றைக்குக்கூட நிலைநிற்கின்றன.

அருவிகளைக் கண்டால் ஜலம் இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, கல் முள்ளாக இருந்தாலும் சரி, மணலாக இருந்தாலும் சரி, படுகையிலேயே மேல் நோக்கி ஏறிச் செல்லும் ஆனந்தமே ஆனந்தம்!

கட்டெறும்புகள், அருப்புப் போல காடுகளில் ஓடும் காட்சிகளை நீங்கள் பார்த்திருக்கலாம். இதைநான் ரோட்டில் சந்தித்தால், வண்டியில் போய்க்கொண்டிருந்தாலும் வண்டியை விட்டிறங்கி அந்த எறும்புப் பத்தியைத் தொடர்ந்து அதன் மூல வளைவரையில் போய்ப் பார்த்துவிட்டுத்தான் திரும்புவேன்.

மழை பெய்தால் அருவிபோல ஓடும் ஜலத்தோடு நானும் அதை அணைபோட்டு வழிமறித்து ஓடுவேன். மழையினால் 'வாங்கோடிய' மணலில் ஊற்றுப் பறித்து ஆனந்த தாண்டவமாடுவேன்.

3

என் சிறு வயதில் எனக்கு மனமார்ந்த தோழர்களே கிடையாது. ஸ்நேகத்தின் பெருமையில் என் சுபாவம் சார்ந்து கிளர்ச்சி யடைந்து ஆழ்ந்து நின்றும், என்னை ஒருவரும் சினேகம் கொண்டாடுவதில்லை. ஒருவரும் என்னுடன் நெருங்கிப் பழகுவதும் இல்லை. நான் பிறந்த காலத்தில் திருஷ்டி இல்லாத ஸ்வக்ஷேத்திர சந்திரனே இதற்கு மூல காரணம்.

ஆகையால் அன்னையையே தெய்வமாககொண்டு, கொண்டாடி அவள் ஆனந்த மடியிலேயே அடங்காத செல்லப்பிள்ளையாய் வளர்ந்தேன். என் தாயின் பால்வடியும் அன்பு சார்ந்த முகம் இன்றைக்கும் என் கண்முன் நிற்கிறது.

ஆனாலும் வீட்டிலேயே இருக்க மாட்டேன், எப்போதும் வெளியில் சுற்றுவேன். காட்டு மாட்டைப்போல் வீட்டுக்குத் திரும்புவேன். தனியாகவே எவ்வளவோ விதமாக விளையாடுவேன். சுறுசுறுப்பாய் தொட்ட காரியத்தை நடத்துவேன். இளம் பிராயத்தில் என் உண்மை நண்பர்கள் யார்? குளத்திலிருக்கும் மீனும், தவளையும் தண்ணீர்ப் பாம்புந்தான். தெருவில் ஓடும் ஆடும், மாடும், கோழியும், வண்டியும், படர்ந்த காடும், சிறு மலைக் குன்றுகளும், கற்பாறைகளும், மலைச் சரிவுகளும், சலசலவென்று மழலை மாறாமல் ஓடிவரும் அருவியும் தான்.

ஆற்றின் நடுவிலே பாறைகளில் துள்ளிக்குதித்து ஓடும் ஊறல் சாரலிலே தான் என் கண்ணும், காலும் கையும். அணைபோட்டுக் குழிதோண்டி, ஊற்றுப் பறித்து சூரிய பகவான் மலைவாயில் சேரும் வரையில் தனிமையாய் விளையாடுவேன். பிறகு ஒரே ஓட்டமாய் வீட்டுக்கு ஓடிப்போய்விடுவேன். சிறுவர்களோடு சேர்ந்து குதிக்கும் விளையாட்டே நான் விளையாடவில்லை.

4

என் சுபாவம் பயந்த சுபாவம். சென்னையில் கிறிஸ்டியன் காலேஜில் சேர்ந்து வாசிக்கும் வரையில் யாரைக் கண்டாலும் பயப்படுவேன். இளம் பிராயத்தில் கொஞ்சம் பயந்தமாதிரியாக இருந்தாலும், ஒருவித தைரியத்திற்கும் சுறுசுறுப்பிற்கும், ஓட்டத்திற்கும், ஊக்கத்திற்கும், தொட்ட காரியத்தை நிறைவேற்றும் பிடிவாதத்திற்கும் அளவே கிடையாது. இந்த எல்லையில்லாத தைரியமும், சுறுசுறுப்பும் அழிந்ததற்கு ஒரே ஒரு காரணம். என் கொட்டத்தை அடக்க எழாவது வயதில் என் தந்தை என்னைப் பள்ளிக்கூடத்தில் போட்டார்! தென்னஞ்சோலையிலிருந்து பிடிப்பட்டுக் கூட்டில் போடப்பட்ட பச்சைக்கிளி போல நானும் பள்ளிக் கூட்டில் அகப்பட்டுவிட்டேன். அந்நிய ஆட்சியில் பிறந்த ஆங்கிலப் படிப்புத் திட்டத்தில் உண்மையான வேங்கடரமணி அழிந்தான்! இந்தப் பள்ளி புகுந்த கதையை அடுத்த முத்தில் சொல்லுகிறேன்.

உதிர்ந்த மணிகள்

என்ன அர்த்தம்?

லார்டு ரண்டால்ப் என்பவர் இப்போது பிரிட்டிஷ் பிரதம மந்திரியாயுள்ள சர்ச்சிலின் தகப்பனார். இந்தியாவைப் பற்றிக் குறிப்பிடுகையில் அவர் சொன்னார்: "நம்முடைய இந்தச் சிறிய தீவை, (இங்கிலாந்தை) உலகத்திலேயே தலை சிறந்த சாம்ராஜ்யமாக்கியது எது? பலத்திலும், ஐச்வரியத்திலும், அதிகாரத்திலும் நம்மை முன்னணியில் நிறுத்தியிருப்பது எது?.... ராணியாரின் கிரீடத்தில் மினுக்கும் அந்த விலை மதிக்கமுடியாத ஸ்வச்சமான ரத்னமல்லவா? அதுவே, நம்முடைய மற்ற குடியேற்ற நாடுகளெல்லாவற்றையும்விட மகிமை பொருந்திய தனம்!...." என்று. அந்த பிரபுவின் பிள்ளையாண்டானல்லவா சர்ச்சில் துரை? அவரும் "நம்முடைய சாம்ராஜ்ய நாடுகள், ஆதீனத்திலுள்ள தேசங்கள் இவைகளைவிட, பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திற்கு மகிமையும் செல்வாக்கும் பலமும் ஏற்படுத்திய அந்த பரம ஸ்வச்சமான மாணிக்கம் அரசர் கிரீடத்திலிருந்து நழுவ ஒருநாளும் நான் விடமாட்டேன்!...." என்று ஆர்ப்பரிக்கிறார். "எங்களிடமுள்ளதை நாங்கள் விடாப்பிடியாக வைத்துக் காப்பாற்றுவோம்." என்று பிரிட்டிஷ் அதிகாரவர்க்கம் சொன்னால் அதன் அர்த்தம்—"இந்தியாவை நாங்கள் எங்கள் வசம்தான் வைத்துக்கொள்ளப் போகிறோம்" என்பதைத்தவிர வேறெப்படி இருக்க முடியும்!

நமது கடமை

இந்தியா விஷயமாய் பிரிட்டனுக்கும் அமெரிக்காவுக்குமிடையே நடக்கும் பேச்சுவார்த்தைகளை இந்திய அரசியல் வட்டாரம் வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கிறது. கிரீன்வுட், மாரிஸன், கிரான்போர்ன் முதலியவர்களுடைய ஓயாத பிரசங்க மழைகளால், இந்திய நிலைமை இன்ன ரீதியிலிருக்கிறதென்பதைப் பிரிட்டன் உணர்ந்துகொண்டுதானிருக்கிறது. இந்த சந்தர்ப்பத்தில், ஜெயிலுக்கு வெளியே இருக்கும், அரசியல்காரர்கள் என்னசெய்கிறார்கள்? ரொம்ப திருப்திகரமான ஏற்பாடாக இல்லாவிட்டாலும், அதற்கு அடுத்த படியாக எவ்வளவு நல்ல ஏற்பாடு செய்து கொடுத்தாலும் ஏற்றுக்கொள்வோம் என்கிறார்கள். அப்படியும் ஒன்றும் கைகூடாவிட்டால், கூடியவரை திருப்தியளிக்கும் இன்னொரு சந்தர்ப்பத்தை அளிக்கும்படி மன்றாடுகிறார்கள்!... இப்படிப்பட்ட அரசியல் தலைவர்கள் தற்சமயம் செய்யவேண்டிய மகத்தான தொண்டு இதுதான். வாயை மூடிக்கொண்டு இருக்கவேண்டும். அதன் மூலம், காங்கிரஸ் மஹாசபையின் ஆட்சேபத்திற்குள்ள ஆத்மீக பலத்தை வளர்க்க முயலவேண்டும். நாற்பது கோடி மக்களின் சார்பாக காங்கிரஸ் "சுயராஜ்ய வாக்குறுதி யில்லாமல் இந்தியாவையும் சண்டையில் ஏன் மாட்டிவிடுகிறீர்கள்?" என்று ஆட்சேபித்திருப்பதை எல்லோரும் ஒருமுகமாக ஆதரித்து நிற்பதல்லவா கடமை?

—'ராய்ஸ் வீக்லி'

துரோகம்

பிரிட்டிஷ் வர்த்தகக் கும்பல் தங்கள் லாபத்தை உத்தேசித்து இந்தியாவில் இருக்கின்றனர். அந்த லாபத்தில் மண் விழுந்தால் அவர்கள் ஆத்திரப்படுவது இயற்கைதான். சென்னை ஐரோப்பிய வர்த்தக சங்கத் தலைவர் நட்டால் இம்மாதிரி ஆத்திரத்துக்காளாகித் தாறுமாறாகப் பேசியிருக்கிறார். காங்கிரஸை சர்க்கார் அடக்குவதை ஆதரிக்கிறார். இவர் ஆதரிப்பதில் ஆச்சரியமில்லை. ஆனால் காங்கிரஸை தாவிப்பதுடனில்லாமல், காங்கிரஸின் ஒலிபரப்பி என்று இவர் கருதும் தேசிய பத்திரிகைகளையும் சர்க்கார் அடக்கவேண்டும் என்றும் யோசனை கூறுகிறார். குதிரை கீழே தள்ளியதுமன்றி குழியும் பறித்தமாதிரி இருக்கிறது விஷயம். இந்திய உப்பினால் பிழைத்து இந்தியாவுக்கு தீங்குதேடுவது யோக்யப் பொறுப்பற்ற செயலாகும். ஐரோப்பிய வர்க்கத்தின் வாய்த்துடுக்கை இந்திய மக்கள் கண்டிக்க வேண்டும்.

'ஹிந்துஸ்தான்'

ஸ்ரீ ரமண கானம்

(சுவாமி சுத்தானந்த பாரதியார்)

இராகம் செஞ்சுருட்டி — ஆதிதாளம்

பல்லவி

ரமணா ரமணா ரமணா
ரமணா ரமணா ரமணா

சரணங்கள்

பரனே தகனே வரனே
பரிபூ ரணனே வருவாய்!
பிரமத் துரியப் பெருவிண் விரிவே
பிறவா நிலையே பிரியா வுறவே (ரமணா)

அருணா சலனே வருவாய்!
அருணோ தயனே வருவாய்
இருளற் றிடரற் றிதயக் குகையுற்
றியல்புற் றொளிபெற் றினிதுற் றிடவே (ரமணா)

அடியார் இதயாம் புயனே
அருள்நா டகனே வருவாய்!
துடியா நிலையே சுடர்மா மணியே
சுகநா யகனே அபயம் அபயம்!! (ரமணா)

பாரதமணி வாழ்க!

சுத்தானந்த பாரதி.

சாமானிய விஷயங்கள்

ஸர். டி. விஜயராகவாச்சாரியார்

இரண்டு ஸ்திரீகளைக் கலியாணம் செய்து கொண்டவனுக்கு என்ன தண்டனை கிடைக்குமென்று ஒரு ஆங்கிலேயன் தனது வக்கீலைக் கேட்டான். "இரண்டு மாமியார்கள்!" என்று அவர் பதிலளித்தார். மனைவியின் தாயைத்தான் அவர் அவ்வாறு குறிப்பிட்டார். மாமியாளிடத்தில் ஒரு ஆங்கிலேயனுக்குள்ள மனப்பான்மையைக் குறித்து நான் அடிக்கடி ஆச்சரியப்படுவதுண்டு. இந்தியாவிலோ வென்றால் சாதாரணமாக ஸ்திரீகள் தங்கள் கணவனின் தாயாரிடத்தில் விரோத மனப்பான்மை உடையவர்களாக இருந்தபோதிலும் புருஷர்கள் தங்கள் மாமியார்களிடத்தில் பிரியமாகவே இருக்கிறார்கள்.

ஆனால் இக்காலத்திலும் பஞ்சாபில் ஒரு விநோத வழக்கம் இருந்து வருகிறது. அங்கு மாமியாராவது மாமனாராவது தன் மாப்பிள்ளையின் உபசாரங்களை ஏற்றுக்கொள்ளுவது சரியல்ல. அவர்கள் தங்கள் பெண்களைப் பார்ப்பதற்காக மாப்பிள்ளை வீட்டுக்குப் போக நேர்ந்தாலும் அங்கு சொற்ப உணவு எடுத்துக்கொள்ளவும் மறுத்து விடுவார்கள். கொஞ்சம் ஆகாரம் செய்யும்படியான அவசியம் நேர்ந்துவிட்டால் உடனேயே அதற்குண்டான விலையைவிட அதிக தொகையைக் கொடுத்துவிடுவார்கள். மருமகன் வீட்டில் ஒரு சோடா சாப்பிட்டு விட்டு அதற்காக மாமியார் ஒரு ரூபாய் கொடுத்ததை நான் நேரில் பார்த்து இருக்கிறேன். மிகுந்த பணக்கார மாப்பிள்ளைகளும் சங்கோசமன்னியில் பணத்தைப் பெற்றுக்கொள்கிறார்கள். நான் ஒரு பஞ்சாபியாக இருந்தால் ஏதாவது சாக்குச்சொல்லி மாமியாரை என் வீட்டுக்கு வரவழைத்து அவளுக்கு ஷோடசோபசாரங்களைச் செய்வேன். அவளுக்குச் செய்யும் உபசாரங்களுக்கெல்லாம் நூறு பங்கு பிரதிப்பிரயோசனம் உடனேயே கிடைக்குமென்ற நம்பிக்கை எனக்குண்டு. ஒரு ஆங்கிலேயனுக்குத் தன் மாமியாரிடத்தில் உள்ளது போன்ற ஒரு மனப்பான்மையிலிருந்து இந்த வழக்கம் உண்டாயிருக்கலாம். அவளை நம் வழிக்கு வராமலிருக்கச் செய்வதற்கு இதைவிட சுலபமான வழி கிடையாது. தென்னிந்தியாவிலோவென்றால் இருதிறத்தாரும் பரஸ்பரம் உபசாரம் செய்து கொள்ளுகிறார்கள்.

தற்காலத்தில் இந்தியாவில் யாராவது சாஸரின் "காண்டர்பரி கதைகளை" வாசிக்கிறார்களா? நான் சொல்லப்போகும் ஒரு விஷயம் சரியா என்று தெரிந்து கொள்வதற்காகவே இந்தக் கேள்வியைக் கேட்கிறேன். மூன்று பெரியநகரங்களில் புஸ்தகசாலை ஒன்றிலாவது இப் புத்தகத்தின் பிரதி ஒன்றுகூட இல்லை. சாஸரின் கதைகளை விரும்பிப் படிப்பவர்கள் அவர் அக்காலத்திய பழக்க வழக்கங்களை தத்ரூபமாகச் சித்திரித்திருக்கிறார் என்பதை அறிவார்கள். "Nonne Priestess' Tale" என்னும் கதை அவர்கள் ஞாபகத்துக்குவரும். அம் மாது நாசூக்காக போஜனமருந்துவதை சாஸர் புகழ்ந்தெழுதியிருக்கிறார். விரல்களின் நுனியால் ஆகாரத்தை எடுத்து துளிக்கூட கீழேசிந்தாமல் அவள் சாப்பிடுவாள். இதிலிருந்து சாஸர் வசித்த காலத்தில் இங்கிலாந்தில் ஸ்பூன்களும் போர்க்குகளும் உபயோகிக்கப்படவில்லையென்றும் ஜனங்கள் கையினால் சாப்பிட்டார்கள் என்றும் தெரிய வருகிறது. தற்காலத்துப் பழக்கம் வெகு நாட்களுக்குப் பிறகு வெனிஸ் நகரத்திலிருந்து இங்கிலாந்துக்கு கொண்டுவரப்பட்டது. இப் புதிய பழக்கம் ஏற்பட்ட காலத்தில் இங்கிலாந்திலுள்ள ஜனங்கள் அது தங்களுக்கு விரல்களைக் கொடுத்த கடவுளைப் பழிப்பதாகும் என்று கருதினார்கள். இக்காலத்து ஆங்கிலேயர்களோ, இந்தியர்கள் வெறும் கையால் சாப்பிடும் வழக்கத்தை வெறுக்கிறார்கள். அதே போல் வட இந்தியாவிலுள்ளவர்கள் தென்னிந்தியர்கள் தங்கள் உள்ளங்கைகளையும் முழு விரல்களையும் சாப்பிட உபயோகிப்பதைப் பரிகசிக்கிறார்கள். வட இந்தியர்கள் தங்கள் விரல்களை மட்டுமே உபயோகிக்கிறார்கள். சாஸரது நாசூக்கான மாதைப்போல் அவர்கள் தங்கள் விரல்களின் நுனியை மட்டும் உபயோகிக்கிறார்கள்.

வட இந்தியாவுக்கும் தென்னிந்தியாவுக்கும் ஒரு விஷயத்தில் ஒற்றுமை இருக்கிறது. நாகரீகம் முற்றிய வீடுகளில் தவிர மற்ற விடங்களில் ஸ்திரீகளும் புருஷர்களும் தனித்

தனியே சாப்பிடுகிறார்கள் — புருஷர்கள் போஜனத்தை முடித்துக்கொண்ட பிறகே ஸ்திரீகள் சாப்பிடுகிறார்கள். ஆங்கிலேய ஸ்திரீகளும் புருஷர்களும் சேர்ந்து உண்ணும் வழக்கம் வெகு காலத்துக்குப் பிறகு ஏற்பட்டதென்பது இந்தியாவில் பலருக்குத் தெரியாது. இந்தப் பழக்கம் ஹாலண்டு தேசத்திலிருந்து மூன்றாவது வில்லியத்தால் இங்கிலாந்துக்குக் கொண்டுவரப்பட்டது. அவர் வருவதற்கு முன் புருஷர்கள் உயர்ந்த மேஜைகளிலும் ஸ்திரீகள் ஒரு மூலையில் தாழ்ந்த ஸ்டூல்களிலும் உண்பது வழக்கம். ஸ்டூல்களைப்பற்றிச் சொல்லும்போது சாப்பாட்டு அறை நாற்காலிகளின் ஞாபகம் வருகிறது. வீட்டிற்குள் ஸ்டூல்களும் பெட்டிகளுமே ஆசனங்களாக உபயோகப்பட்டு வந்தன. முதலாவது சார்லஸ் காலத்தில் தான் பிரப்பம் சாய்வுகளும் மெத்தை வைத்ததுமான நாற்காலிகள் உபயோகத்துக்கு வந்தன.

தேசத்தின் லாபத்தைக்கருதி தென்னிந்தியாவிலும் ஒரு புதுவழக்கத்தை மட்டும் கொண்டுவரலாம் — இங்கிலீஷ்காரர்களுடைய பந்தியில் பதார்த்தங்கள் ஒவ்வொருவரிடமும் கொண்டுவரப்படும்போது தனக்குப் பிடித்தவைகளை மட்டும் வேண்டிய அளவு ஒவ்வொருவனும் எடுத்துக்கொள்ளுகிறான். இந்தியாவிலோ பரிசாரகன் வைத்தது சட்டம். தான் சமைத்திருக்கும் பதார்த்தங்கள் எல்லாவற்றையும் சாப்பிடுபவர்களின் விருப்பு வெறுப்பைப் பொருட்படுத்தாமல் அவன் பரிமாறுகிறான். விருந்தாளி வேண்டாமென்று எவ்வளவு மன்றாடினாலும் பிரயோஜனமில்லை. விருந்தாளி எவ்வளவுக்கெவ்வளவு அதிக கௌரவம் வாய்ந்தவரோ அவ்வளவுக்கவ்வளவு அதிக உணவை அவரிடத்தில் திணிக்க வேண்டுமென்ற அபிப்பிராயம் இருந்து வருகிறது. கலியாண விருந்துகள் போன்ற சாப்பாடுகளில் இத்தகைய மனப்பான்மையால் நல்ல உணவு ஏராளமாக வீணாக்கப்படுகிறது. இந்தியாவின் பல பாகங்களில் ஒருவருக்குப் போட்ட சாதத்தை பிச்சைக்காரன்கூடத் தொடுவதில்லை. ஆகையால் இந்த ஊதாரித்தனமான வழக்கம் ஒருவருக்கும் நன்மை பயப்பதில்லை. கலியாணச் செலவு வெகுவாகக் குறைக்கப்பட்டிருப்பது பொருளாதார மந்தத்தினால் இத்தேசத்திற்கு ஏற்பட்ட ஒரு பெரிய நன்மை. சில வருஷங்களாக கலியாணச் சடங்குகளை நாலு நாளி விருந்து ஒரு நாளாகச் செய்தது பாராட்டத்தக்கது. பழைய காலங்களில் கலியாணங்கள் நான்கு முதல் ஆறு நாட்கள்வரை நடக்கும். விருந்தினர்களை பந்துமித்திரர்களுடன் நான்கு நாட்களுக்கு முன்னதாகவே வரும்படி அழைப்பதும் சம்பிரதாயம். நாட்களின் எண்ணிக்கையைக் குறைத்திருப்பது பொருளாதாரத் துறையிலும் சுகாதாரத் துறையிலும் மிகுந்த நன்மையை உண்டுபண்ணியிருக்கிறது. ஆகாரத்தைப் பரிமாறுவதில் இங்கிலீஷ்காரர்களைப் பின்பற்றுவது லாபகரமாகவும், ஆரோக்கியத்தைக் கொடுப்பதாகவு மிருக்குமென்பது என் யோசனை. மேல்நாட்டு நாகரிகம் முதிர்ந்த சில இந்தியர்கள் வாழை அல்லது தையல் இலைகளுக்குப் பதிலாக உலோகத்தினால் செய்த தட்டுகளை உபயோகிப்பது நன்மை பயக்குமென்று சொல்லுகிறார்கள். மௌளடாபாட் வெள்ளை உலோகத்தினால் செய்த தட்டுகளையும் கிண்ணங்களையும் உபயோகிப்பது நாளடைவில் லாபகரமாக இருக்குமென்பதை நான் ஒப்புக்கொள்ளுகிறேன். அந்த மாறுதல்களை முனிசிபாலிடி அதிகாரிகளும் வரவேற்பார்களென்பதில் சந்தேகமில்லை.

பழைய காலத்தில் காலை சுமார் பத்தரை மணிக்குச் சென்னையில் நடுத்தர வகுப்பினர் வசிக்கும் தெருக்களின் வழியாகச் செல்லும்போது வழியில் குவிந்துகிடக்கும் எச்சில்இலைகளை மிதிக்காமல் இருப்பதற்காக பல தடவை தாண்டிக் குதிக்கவேண்டியிருக்கும். வீட்டு வாசற்படியிலிருந்து எறியப்படும் பொழுது அந்த இலைகள் அவைகளுக்காக ஏற்படுத்தப்பட்டிருக்கும் தொட்டிகளில் விழாமல் அந்தந்தத் தொட்டிகளைச்சுற்றி விழுந்துகிடக்கும். பம்பாயில் தெருக்களில் நடந்து செல்வதில் இந்த விதமான அபாயம் இல்லை ஆனால் வீடுகளின் மேல் மாடிகளிலிருந்து கொட்டப்படும் ஜலத்தினால் நனைந்து போகாமலிருப்பதற்காக தாண்டிக்கொண்டும் குதித்துக்கொண்டும் செல்ல நேரிடும்

இலைகளுக்குப்பதில் தட்டுகளை உபயோகித்தால் முனிசிபாலிடிகளுக்கும் தனி நபர்களுக்கும் லாபம் ஏற்படுமென்றாலும் அவ்வித மாறுதல் நமது நகரங்களில் இப்போதே பிரபலமாக விருக்கும் க்ஷயரோகத்தை விருத்தி செய்யும் என்னும் பயம் ஏற்பட்டிருக்கிறது. தட்டுகளைக் கொதிக்கும் வெந்நீரில் அலம்பினால் தான் வியாதிக் கிருமிகள் அவைகளிலிருந்து அறவே ஒழிக்கப்படும். எவ்வளவு வேலைக்காரர்கள், அல்லது அவர்களுடைய

எஜமானர்கள், இவ்விதமாகச் சுத்தம் செய்வார்களென்று நாம் எதிர்பார்க்க முடியும்?

இருபது வருஷங்களுக்குப் பிறகு தென்னிந்தியாவுக்குத் திரும்பி வந்ததும் ஹோட்டல்களும் காபி, டீ கிளப்புகளும் ஏராளமாக அதிகரித்திருப்பது என் கவனத்தைக் கவர்ந்தது. அந்தக் காலத்தில் இருந்ததை விட தற்பொழுது இந்த போஜனசாலைகளில் அளிக்கப்படும் உணவு உயர்ந்த ரகமென்பதை நான் ஒப்புக்கொண்டுதான் ஆகவேண்டும். எத்தனை ஹோட்டல்களில் ப்ளேட்டுகளும் கிண்ணங்களும் கொதிக்கும் ஜலத்தில் சரிவர சுத்தம் செய்யப்படுகின்றன? ஒருவர் சாப்பிட்டவுடன் அவைகளைக் குளிர்ந்த ஜலத்திலோ, அல்லது சூடான வெந்நீரிலோ அமிழ்த்திவிட்டு மறுபடியும் உபயோகப்படுத்துகிறார்கள். காபி, டீ முதலிய பானங்களை அருந்தும் வழக்கமும் மிகவும் அதிகரித்திருக்கிறது.

முனிசிபல் சுகாதார உத்தியோகஸ்தர்கள் கொதிக்கும் வெந்நீரில் பாத்திரங்களை அலம்பவேண்டுமென்று கட்டாயப் படுத்துகிறார்களா? அவர்களுக்குப் பிரயோஜனப்படும் படியான அச்சுப் பிரசுரங்களை ஹெல்த் ஆபீசர்கள் வழங்குகின்றார்களா? வட இந்தியாவில் பல ரயில்வே ஸ்டேஷன்களில் பால்காரர்கள் புதிய மண் கிண்ணங்களில் பாலை விற்கிறார்கள். வாங்குகிறவர்கள் பாலைச் சாப்பிட்ட பிறகு கிண்ணங்களை எறிந்து விடுகிறார்கள். இந்த வழக்கத்தில் பல நன்மைகள் இருக்கின்றன. ஒரிஸ்ஸாவில் நவநாகரீக டீபார்ட்டிகளிலும் ஆகாரங்கள் புதிய மண் தட்டுகளிலும், பானங்கள் மண் கிண்ணங்களிலும் கொடுக்கப்படுவதை நான் பார்த்திருக்கிறேன். பார்ட்டி முடிந்ததும் இந்த மண்பாத்திரங்களை தூர எறிந்துவிடுவார்கள். பொதுஜன சுகாதாரத்தை உத்தேசித்தும் குடிசைத் தொழிலை அபிவிருத்தி செய்வதை முன்னிட்டும் இந்த வழக்கத்தை நாம் ஆதரிக்க வேண்டும்.

சோஷல் வெல்பேர் பத்திரிகையில் ஆங்கிலத்திலெழுதப்பெற்ற இக் கட்டுரையை மொழிபெயர்த்துதவியவர் ஸ்ரீ தி. சக்ரபாணி பி.ஏ.

கூட்டங்களின் மனதைக் கொள்ளைகொண்டவர்

[கிரிக்கட் புலி ஸி. கே. நாயுடுவைப் பற்றிய குறிப்பு இது]

வே. ரா. சுந்தரராமன், எம். ஏ.

டென்மார்க் என்னும் ஐரோப்பாவைச் சேர்ந்த தேசத்தில் இரு சகோதரர்கள் இருக்கின்றனர். ஒருவர் பெயர் நீல்ஸ் போர் (Niels Bohr). மற்றொருவர் பெயர் ஹாரால்டு போர் (Harald Bohr). இருவருள் ஹாரால்டு என்பவர் பெரியவர். இருவரும் உலகமறிந்த விஞ்ஞான ஆராய்ச்சியாளர். அத்தேசத்தின் தலைநகரான கோபன்ஹேகன் என்னும் ஊரிலுள்ள சர்வகலாசாலையில் இருவரும் போதனாசிரியராயிருக்கின்றனர். நீல்ஸ் போர் என்பவர் பௌதிக சாஸ்திரத்தில் அரிய ஆராய்ச்சிகளைச் செய்து நோபெல் பரிசு பெற்றவர். ஹாரால்டு போர் பிரபல கணித சாஸ்திரி. அத்துடன் கால்பந்து ஆடுவதிலும் அவர் திறமை வாய்ந்தவர். ஒரு பெரிய சர்வ தேசப் போட்டியில் தம்முடைய தேசமாகிய டென்மார்க்கின் கக்ஷிக்காக ஹாரால்டு "கோல் கீபர்" என்னும் ஸ்தானத்தில் வெகு திறமையுடன் விளையாடி தம் தேசத்திற்குப் பெரும் புகழைச் சம்பாதித்தார்.

அவ்வருஷம் அவ்விளையாட்டு நடந்த சில நாட்களுள் இளைய சகோதரரான நீல்ஸ் என்பவர் ஒருநாள் கோபன்ஹேகனில் ஒரு 'ட்ராம்' வண்டியில் போய்க்கொண்டிருந்தார். வசீகரத்துடன் கூடிய தோற்றத்தையுடைய அவருடன் அவ்வண்டியை ஓட்டிக்கொண்டிருந்தவன் பேசலுற்றான். ஹாரால்டின் தம்பி இவர் என்பதை மட்டுமே அவன் அறிந்திருந்தானேயொழிய 'நீல்ஸ்', நோபெல் பரிசைப் பெற்றதனால் அத்தேசத்திற்கே விஞ்ஞான உலகில் பெரிய பெயர் ஏற்பட்டிருக்கிறதென்பதை அவன் அறியவில்லை. இவரை நோக்கி அவன்,

"பிறந்தால் உங்கள் அண்ணாவைப்போல் பிறக்கவேண்டும்! அன்று அவர் என்ன அழகாக 'கோலில்' விளையாடினார்! இந்நாட்டின் பெருமைக்கும் புகழிற்கும் தம்மை எவ்வளவு தூரம் இன்றியமையாதவராய் ஆக்கிக்கொண்டு விட்டார்! நம் நாடு முழுவதுமே அவருக்கு வெகுவாய்க் கடன் பட்டிருக்கிறது. அவர் அவ்வளவு நன்றாய் ஆடியிராவிடில், அப்பெரும் பந்தயத்தில் நம் நாட்டு கோஷ்டியார் எவ்வாறு ஜயித்திருக்கமுடியும்? ஊரெங்கும் அவர் பேச்சாகவே யிருக்கிறது" என்றான்.

நீல்ஸ் இதைக்கேட்டுப் புன்னகை புரிந்தார்.

விஞ்ஞான சாஸ்திரத்தில் அரிய ஆராய்ச்சிகளைச் செய்து நோபெல் பரிசைப் பெறுவது சிரமசாத்தியமான காரியம். இப்புகழ் ஒருவருக்குக் கிடைத்தால் அதனால் அவருடைய சொந்த நாட்டிற்கே ஒரு தனிப் பெருமை ஏற்படும். அத்தகைய நோபெல் பரிசைப் பெற்றிருந்த போதிலும், நீல்ஸின் ஆற்றலை டென்மார்க்கின் பாமரஜனங்களில் ஒருவனான அந்த ட்ராம் வண்டி யோட்டி அறிந்து கொள்ளவில்லை. ஹாரால்டும் கணித சாஸ்திரத்தில் உயர்ந்த ஆராய்ச்சிகளைச் செய்திருக்கிறார். அதைப் பற்றியும் அவனுக்கு ஒன்றும் தெரிந்திருக்கவில்லை. கால்பந்து விளையாட்டில் அவருக்கு இருந்த திறமைதான் அவன் மனதைக் கவர்ந்திருந்தது. அதற்காகத்தான் அவரை அன்று அம்மாதிரி வாயாரப் புகழ்ந்து பேசினான். தேகப்பயிற்சி சம்பந்தமான திறமை, மூளையை உபயோகித்துச் செய்ய வேண்டிய காரியங்களில் காட்டப்படும் ஆற்றல், இவ்விரண்டினுள்ளும் முன் சொன்னதே சாதாரண ஜனங்களுக்கு அதிக கவர்ச்சியை யுண்டுபண்ணுகிறதென்பது *இந்நிகழ்ச்சியினால் விளங்குகிறது.

குறிப்பு:- *இவ்வரலாறு ஜெர்மனி தேசத்திலுள்ள லீப்ஜிக் (Leipzig) என்னும் ஊரிலுள்ளவரும் நோபெல் பரிசு பெற்ற பிரபல விஞ்ஞான சாஸ்திர ஆராய்ச்சியாளருமான ப்ரொபசர் ஹேஸன்பர்க் (Heisenberg) என்பவர் 1929-ம் வருஷம் இந்நாட்டிற்கு விஜயம் செய்திருந்தபோது அவரால் நம் நாட்டு பிரசித்த பௌதிக சாஸ்திர ஆராய்ச்சியாளரான கே. எஸ். கிருஷ்ணன் (பின்னால் எப். ஆர். எஸ். பதவி பெற்றவர்) என்பவருக்குச் சொல்லப்பட்டது. நான் இதை 1933-ல் நண்பர் கிருஷ்ணனிடமிருந்து டாக்காவில் அறிந்தேன்.

என்னநுபவத்திலும் இம்மாதிரி சம்பவங்கள் உண்டு. நான் சென்னை ராஜதானிக் கலாசாலையில் மாணவனாயிருக்கையில் காலேஜில் தேகப்பயிற்சி சம்பந்தமான போட்டிகளிலும் விளையாட்டுகளிலும் தனக்கு ஈடு இணையில்லாமல் எல்லாப் பரிசுகளையும் ஒரு மாணவன் பெற்றுவந்தான். ஆனால் படிப்பில்மட்டும் அவன் நிரக்ஷரகுக்ஷி. ஒவ்வொரு வகுப்பிலும் நிதானமாய் இரண்டிரண்டு வருஷங்கள் தங்கி வந்தான். அதே சமயத்தில் படிப்பில் வெகு மேதாவியாய் விளங்கிப் பின்னர் 'ஐ. ஸி. எஸ்.' முதலிய பெரும் பதவிகளையடைய விருந்த சிலரும் அக்கலாசாலையில் வாசித்து வந்தனர். ஆனால் அவர்களுள் ஒருவன் பெயராவது அதிகமாய் அடிபடவில்லை. இவனைமட்டும் எல்லா மாணவர்களும் அறிந்திருந்தனர். படிப்பில் இருக்கும் சூடிகைத்தனத்தைவிட தேகப்பயிற்சியிலுள்ள திறமைதான் மேம்பட்டதாக எல்லோரும் மதித்ததாக எனக்குத் தோன்றிற்று.

முற்காலத்திலும் தேகப்பயிற்சியும், தேக வலிமையும் இன்றியமையாதவை யெனக் கருதப்பட்டன என்பதற்குப் போதிய சான்று நம் புராண இதிகாசங்களில் கிடைக்கிறது—உதாரணமாக மகாபாரதத்தில் சாந்திபர்வத்தில் 166-ம் அத்தியாயத்தில் பீஷ்மர் யுதிஷ்டிரருக்குச் செய்யும் ஆபத்தர்மம் என்னும் போதனையில் இவ்விஷயம் விளக்கப்பட்டிருக்கிறது. அரசன் எவ்வெவ்வித மனிதர்களின் சேர்க்கையை நாடவேண்டும் என்பதைப் பற்றிச் சொல்லுகையில் பீஷ்மர் "வியாயாம சீலர்"களின் நட்பு அரசர்களுக்கு அவசியமானது என்று எடுத்துக் காட்டுகிறார். 'வியாயாமம்' என்பது 'தேகப்பயிற்சி'. தேகப்பயிற்சியில் வல்லவர்கள்தான் 'வியாயாம சீலர்கள்'.

எனவே ஒருநாட்டில் உதித்த பெரியார்களாக தேகப்பயிற்சியிலும் அது சம்பந்தமான துறைகளிலும் பெயர்பெற்றவர்களையும் கருதவேண்டும். நம் நாட்டில் அத்தகைய பெரியார்களுள் லெஃப்டினன்ட் கர்னல் ஸி கே. நாயுடு என்பவர் ஒருவராவர். 'கிரிக்கட்டு' என்னும் ஆட்டத்தில் அவர் மிகத்திறமை வாய்ந்தவர். அவ்வாட்டத்தில் நம் நாட்டிற்கே பெரும் புகழைச் சம்பாதித்துக் கொடுத்திருக்கும் சிலருள் அவரும் ஒருவர்.

இவருடைய முழுப்பெயர் கோட்டரி கங்கய்யா நாயுடு என்பது. இவர் 31–10–1895-ல் பிறந்தார். இவர் காலத்தில் இவருடைய குடும்பத்தார் மத்திய இந்தியாவிலுள்ள மத்திய மாகாண வாசிகளாய் விட்டார்கள். எனினும் சில தலைமுறைகட்கு முன்னர் இவருடைய முன்னோர்கள் சென்னைமாகாணத்தில் ஆந்திரப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்களாயிருந்தனர். சென்னைக்கும் இவருக்கும் உள்ள தொடர்பை இவருடைய ஜாதிப்பெயராகிய நாயுடு என்பதே குறிக்கிறது.

இவருக்கு 'கிரிக்கட்டு' என்று சொல்லப்படும் பந்தாட்டத்தில் முதல் முதலில் பரிச்சயம் ஏற்பட்டது நாகபுரியில் 'பிஷப் கலீஜியேட் ஸ்கூல்' என்னும் பள்ளிக்கூடத்தில் இவர் மாணவராயிருக்கையில் தான். ஆட்டத்தில் கலந்துகொண்ட சில நாட்களிலேயே இவர் தமதுபள்ளிக்கூட "கிரிக்கட்டு" கோஷ்டியின் தலைவர் (கேப்டன் — Captain என்று ஆங்கிலத்தில் சொல்லுவது) ஆனார். பின்னர் அங்கேயே 'மோடி கிரிக்கட்டு கிளப்பு' என்னும் சங்கத்தின் 'கிரிக்கட்டு' கோஷ்டிக்குத் தலைமை வகித்து ஆடினார்

பிரசித்தமான ஆட்டங்களில் இவர் கலந்துகொண்டது 1916-ல் தான். அவ் வருஷம் முதல் இவர் இந் நாட்டிலேயே மிகச் சிறந்ததென்று கருதப்படும் 'பம்பாய் குவாட்ராங்குலர்' (பின்னால் இதுவே 'பம்பாய் பென்டாங் குலர்' என்று மாறிற்று) என்னும் போட்டிப் பந்தயத்தில் ஹிந்துக்கள் கோஷ்டியில் ஆடியிருக்கிறார். அப் பந்தயங்களில் கலந்துகொண்ட எல்லோரிலும் இவர்தான் முதன் முதல் 1000 'ஓட்டங்கள்' எடுத்தவர். இத்துடன் இவர் சென்னை மாகாணத்தின் சார்பிலும் மத்திய மாகாணத்தின் சார்பிலுங் கூட ஆடியிருக்கிறார்.

இந்திய 'கிரிக்கட்டு' கோஷ்டிகளுடன் இவர் பலமுறை இங்கிலாந்திற்கும் போயிருக்கிறார். முதன் முதலாக இவர் அவ்வாறு போனது 1931-ம் வருஷத்தில். அவ்வருஷம் இங்கிலாந்தில் இவர் அங்குள்ள "இந்திய ஜிம்கானா" என்னும் சங்கத்தின் கோஷ்டியாருக்குத் தலைமை வகித்து ஆடி 1000 'ஓட்டங்கள்' எடுத்தார். இவ்வருஷம் இவர் இங்கிலாந்தில் ஆடப்பட்டுவந்த 'கிரிக்கட்டு' ஆட்டத்தின் நுட்பங்களை நன்கு அறிந்துகொண்டார். இவ்வநுபவம் அடுத்த வருஷமாகிய 1932-ல் இவர் ஓர் அகில இந்திய 'கிரிக்கட்டு' கோஷ்டியுடன் அந்நாட்டிற்கு மீண்டும் செல்லுகையில் இவருக்கு மிகவும்

பயன்பட்டது. இம்முறை அங்கு ஆடப்பட்ட பல போட்டிப்பந்தய ஆட்டங்களில் தலைமை வகிக்கும் பொறுப்பு இவருக்கு ஏற்பட்டது. இதைத் திறமையுடன் நிர்வகித்து அம்முறை இவர் தாமே மொத்தம் 1842 'ஓட்டங்கள்' எடுத்தார். இதில் 6-தடவைகளில் இவர் ஒரே ஆட்டத்தில் 100க்கு மேற்பட்ட ஓட்டங்கள் எடுத்தது அடங்கியிருந்தன. இவ் வருஷம் இவருடைய ஆட்டத்திலிருந்து இவர் ஓட்டம் எடுப்பதில் மட்டும் திறமை வாய்ந்தவரல்லர்; பந்தெறிவதிலும் சமர்த்தர் என்பது தெரிய வந்தது. தாம் எறிந்த பந்துகளால் இம்முறை இவர் 79-பேர்களை ஆட்டத்திலிருந்து வெளியேற்றினர். இதை 'கிரிக்கட்டு' பரிபாஷையில் 'விக்கட் எடுப்பது' என்று சொல்லுவார்கள்.

அதற்குப்பின் விஜயநகரம் இளவரசரின் தலைமையில் சீமைக்குச்சென்ற அகில இந்திய 'கிரிக்கட்டு' கோஷ்டியுடனும் இவர் சீமைக்கு போய் விளையாடினர்.

இந்தியாவிலும், பம்பாய் 'குவாட்ராங்குலர்', சென்னையில் பிரதிவருஷமும் இந்தியர்களுக்கும் ஐரோப்பியர்களுக்கும் நடக்கும் பெரும் போட்டிப் பந்தயத்தில் சில, இவைகளைத் தவிர 'கில்லிகன்' என்பவர் தலைமையில் இந் நாட்டிற்கு வந்த ஆங்கில 'கிரிக்கட்டு' கோஷ்டி, பின்னர் 'ஜார்டின்', 'டென்னிஸன்' பிரபு முதலியோர்களின் தலைமையில் இங்கு வந்த ஆங்கில 'கிரிக்கட்டு' கோஷ்டிகள், ஆஸ்திரேலியாவிலிருந்து 'ரைடர்' என்பவர் தலைமையில் இங்கு வந்த கிரிக்கட்டு கோஷ்டி, இவைகளுக்கெதிரியாய் ஆடின நம் நாட்டு கோஷ்டிகளில் கலந்து கொண்டும், இவைகளுள் பலவைகளில் தலைமை வகித்தும் ஆடினர். ஒரே ஆட்டத்தில் ஒரு மூச்சில் 100 'ஓட்டங்கள்' எடுப்பது 'கிரிக்கட்டில்' ஒரு பெரிய ஆற்றல். இதற்கு அவ்வாட்டத்தின் பரிபாஷையில் 'ஸெஞ்சரி' (Century) அதாவது, நூறு ஓட்டங்கள் எடுப்பது என்று சொல்லுவார்கள். அம்மாதிரி இவர் இதுவரையில் முக்கியமான ஆட்டங்களில் 100 'ஸெஞ்சரி'கள் எடுத்திருக்கிறார். அதாவது 'ஸெஞ்சரி'களிலேயே ஒரு 'ஸெஞ்சரி'!

"கிரிக்கட்டு" என்னும் ஆட்டத்தில் கலந்து கொள்வோர்கள் மூன்று வழிகளில் சோபித்து விளங்கலாம். ஒன்று, பந்தடித்து அதிக ஓட்டங்கள் எடுப்பது. மற்றொன்று, பந்தெறிந்து எதிராளிகளை ஆட்டத்தை விட்டு வெளியேற்றுவது. மூன்றாவது, எதிரிகள் அடிக்கும் பந்துகளைத் தடுத்து அவர்கள் அதிக ஓட்டங்கள் எடுக்காமற் செய்து விடுவது. அல்லது அடித்த பந்து மேல்நோக்கி கிளம்புகையில் அது கீழே விழு முன்னரே அதைப் பிடித்து, அப்பந்தை அடித்து எதிரி ஆட்டக்காரனை ஆட்டத்தினின்றும் வெளியேற்றிவிடுவது. கடைசியாகச் சொன்னதற்கு 'பீல்டிங்' (Fielding) என்பது 'கிரிக்கட்டு' பரிபாஷைப் பெயர். சாதாரணமாய் இம் மூன்றில் ஏதாவது ஒன்றிலோ, இரண்டிலோ தான் இவ்வாட்டத்தில் கலந்து கொள்பவர்களுள் பெரும்பாலோர் திறமை வாய்ந்திருப்பார்கள். இவர் மட்டும் இம் மூன்று துறைகளிலும் பெயர் வாய்ந்தவர். எனவே ஏதாவது ஒரு போட்டிப்பந்தய ஆட்டத்தில் இவைகளுள் ஒன்றில் தவறினல், மற்ற இரு துறைகளில் இவர் சிறந்து விளங்குவது நிச்சயம். மூன்றிலும் இவர் தவறி விடுவதென்பது அரிது.

இவர் பந்தடிப்பது இவ்வாட்டத்தின் ரஸிகர்கட்கு ஒரு தனி மகிழ்ச்சியை அளிக்கும். ஆடுவதில் இவருக்கென்றே ஒரு தனி வழி ஏற்பட்டுவிட்டது. அதை "நாயுடு ஸ்டைல்" (நாயுடு 'பாணி') என்று சொல்லிப் பாராட்டுவார்கள். இவர் ஆட்டத்திற்குப் போகும் போது இவருடைய நடை, போனபின் அங்கு நிற்கும் தோரணை, பந்தை அடிப்பதில் இவருக்கிருக்கும் லாகவம், இவை யெல்லாம் இவ்வாட்டத்தின் நுட்பங்களை ரஸிக்கக்கூடியவர்களுக்கு ஓர் அளவிலா ஆனந்தத்தை யளிக்கும். பந்தடிப்பதில் பல விதம் உண்டு. வலது கால்பக்கம் மட்டையை வீசி அடிப்பது, இடப் பக்கம் அடிப்பது, நடுமையத்தில் அடிப்பது, தலைக்குமேல் மட்டையை வீசிப் பின்னல் பந்தைச் செலுத்துவது, பந்து எறிந்தவன் பக்கமே திருப்பியடிக்கப் படுவது, இப்படியெல்லாம் பல ரகங்கள். இவைகளுள் பலருக்குச் சில விதமான அடிகள்தான் வரும். இவருக்கென்றாலோ எல்லா விதமான அடிகளும் வரும். 'கில்லிகன்' என்பவரின் தலைமையில் இந்நாட்டிற்கு வந்த கோஷ்டியுடன் இவர் பம்பாயில் ஆடிய ஆட்டத்தில் இவர் பலவிடங்களிலும் அடிக்கத்தகுந்த ஆற்றலையுடையவர் என்பதை நிரூபித்துக் காட்டினர். அதுவும் அடிப்பதற்குக் கடினமான பந்துகளை எறியக் கூடிய 'வில்லியம் மாரிஸ் டேட்' என்பவரின் பந்துகளைத்தான் அம்மாதிரி விரட்டி விரட்டி யடித்தார். இதை வெகுநாட்கள்வரை

ஒரு படம் போட்டு விளக்கிக் காட்டி வந்தார்கள்.

'ஸிக்ஸர்' என்னும் ஒருவித அடி இவருக்கு சர்வ சாதாரணமாய் வரும். இதில் அடித்த பந்து விளையாடும் மைதானத்தின் எல்லைக்கப்புறம் போய்தான் பூமியில் முதன் முதலாக விழும். ஒருமுறை கல்கத்தாவில் 'ஜார்டின்' என்பவரின் தலைமையின் கீழ் இந்நாட்டிற்கு வந்த ஆங்கில "கிரிக்கட்டு" கோஷ்டியாருக்கு எதிரியாக இவர் ஆடுகையில் இம்மாதிரி இவர் அடித்த 'ஸிக்ஸரில்' பந்து கூட்டத்தில் உட்கார்ந்து ஆட்டத்தைப் பார்த்துக் கொண்டிருந்த என்னுடைய அடித்தொடையில் வந்து விழுந்தது. நான்கு நாட்கள் வலி ஆறவில்லை. வந்த பந்து அவ்வளவு "சூடானது"! அன்றிரவு எங்கள் சங்கத்தில் அவருக்கும் அவர் சகாக்களுக்கும் கொடுத்த ஒரு விருந்தில் காரியதரிசி என்னை அவருக்கு அறிமுகப்படுத்துகையில் நான் "இன்று நீங்கள் அடித்த 'ஸிக்ஸரை' (என் அடித் தொடையைக் காட்டி) இங்கு 'பிடித்தேன்' என்றேன்." நான் எதைக் குறித்தேன் என்பதை உணர்ந்து கொண்ட அவர் உடனே, "அதற்காக நான் மிகவும் வருந்துகிறேன்" என்றார். "பரவாயில்லை உங்கள் பந்தைப் 'பிடிக்க' நேர்ந்தது எனக்கு ஒரு பெருமையே" என்று நான் விடையளிக்கையில் அவர் புன்னகை புரிந்தார்.

எதிரிகள் அடிக்கும் பந்துகளைத் தடுப்பதிலும் பிடிப்பதிலும் இவருக்கு நிகர் இவரேதான். சில சமயங்களில் தரையிற் படுத்த வண்ணம் ஒரே கையினால்—அதுவும் 2, 3, விரல்களினால் மட்டுமே—தரையோடு தரையாய் வரும் பந்தையும் எளிதிற் பிடித்து விடுவார். பந்தடித்தவர் அடித்ததுதான் தாமதமாயிருக்கும். இவர் பிடித்ததை ஒருவரும் சரியாய்ப் பார்க்க முடியாமலிருக்கும். அடித்தவர் ஆட்டத்திலிருந்து வெளியேறுவதும், ஆட்டத்தைப் பார்க்கும் கூட்டத்திலிருந்து எழும் பெருத்த கரகோஷமுமே தெரியவரும். அவ்வளவு துரிதமாய்க் காரியத்தைச் செய்து முடித்துவிடுவார். இவர் பந்தடிப்பதிலும் இதே துரிதம். பந்தெறியப்படுவதுதான் நமக்குத் தெரியும். இவர் அதை எப்படி அடித்தார், எப்பொழுது அடித்தார் என்பது புலப்படாது. பந்துமட்டும் மைதான எல்லைக்கப்புறம் போய் நிற்கும். இவ்வேகத்தைக் கண்டோர்க்கு தாடகை வதத்தில் கம்பர் ராமனின் துரிதப்போர்ச் செயலை வர்ணிக்கும் அடியிற்கண்ட செய்யுள் ஞாபகம் வரும்:-

"மாலு மக்கணம் வாளியைத் தொட்டதும்
கோல விற்கால் குனித்ததுங் கண்டிலர்
கால னைப்பறித் தக்கடி யான்விட்ட
சூல மற்றன துண்டங்கள் கண்டனர்".

இவருடைய செயல்களில் அவ்வளவு லாகவம், அவ்வளவு வேகம்!

இவருடைய துரிதமான ஆட்டத்திற்கு திருஷ்டாந்தமாக அடியிற்கண்ட நிகழ்ச்சியைக் குறிக்கலாம். சென்னையில் வருஷாந்தர இந்திய ஐரோப்பியப் போட்டிப்பந்தய ஆட்டத்திற்கு இவர் ஒருமுறை வந்திருந்தார். அன்று உள்ளூர் ஆட்டக்காரர் ஒருவர்—பிரபல ஆட்டக்காரர் என்று பெயர் வாய்ந்தவர்—இவருக்கு முன்பே வெகு நாழியாக ஆடி, இவருக்குப் பின்பும் நெடுநேரம்இருந்து ஒரு 'நூற்றுண்டு' ஓட்டங்கள் எடுத்தார். அவருக்கு அப்புறம் ஆடத்தொடங்கிய இவர் சிறிதுநேரத்தில் 100 ஓட்டங்களுக்குமேல் எடுத்துவிட்டு அவருக்கு நெடுநேரம் முன்பே ஆட்டத்திலிருந்து வெளியேறிவிட்டார். ஒரு நாள் முழுவதும் உழைத்து செய்த வேலையை இவர் சிறிது நேரத்தில் முடித்துவிட்டார்!

இவருடைய தலைமை தம் கோஷ்டியிலுள்ள இளைய ஆட்டக்காரர்களுக்கு உத்ஸாகமளிப்பதுடன் ஆட்டத்தைப் பார்க்க வந்திருக்கும் கூட்டத்திலுள்ளோரின் மனதையும் கொள்ளைகொண்டுவிடும். இவர் பந்தடிப்பதில் தவறி இவருடைய 'ஸிக்ஸர்'களையும் 'பௌண்டரி'களையும்—இது ஒருவித அடி—காண ஆவலுடன் கூடியிருக்கும் ஜனத்திரளை ஏமாற்றிவிடலாம். எனினும் இவர் ஆட்டத்தில் தோன்றி தம் கக்ஷியாரின் ஆட்டப்போக்கை திட்டஞ்செய்து நடத்துவதே அவர்களுக்குத் திருப்தியளித்துவிடும். நாயுடு ஆட்டத்தில் கலந்து கொள்ளுகிறார் என்று தெரிந்தாலே போதும். அவ்வாட்டத்திற்கு அபரிமிதமான கூட்டக்கூடி விடுவதும் ஏராளமான பணம் வசூலாவதும் நிச்சயம். கூட்டங்களின் மனதை இவர் கொள்ளைகொண்டு விடுகிறார் என்று சொல்லின் அது முற்றிலும் பொருந்தும்.

'கிரிக்கட்டு' கோஷ்டிகளுக்குத் தலைமை வகிப்பதில் இவருக்கு ஈடுஇணையில்லை என்றே சொல்லவேண்டும். தலைமை வகிக்கையில் தம் கோஷ்டியிலுள்ளவர்கள் எப்படி நடந்து

கொண்டால் ஆட்டம் நன்றாய் அமையும் என்பதிலேயே இவர் கருத்தாயிருப்பார். ஒரு முறை கல்கத்தாவில் ஆடப்பட்ட ஒரு முக்கிய மான போட்டிப்பந்தய ஆட்டத்தில் இவர் தலைமை வகித்தார். மொத்தம் நான்கு நாட்கள் ஆட்டம். முதல்நாள் ஆட்டம் முடிந்தது. நிலைமை மிகவும் மோசமாயிருந்தது. இவருடைய கக்ஷி தோற்குந்தறுவாயில் இருந்தது. அன்றிரவு இவருக்கும் இவருடைய கோஷ்டியிலுள்ள சிலருக்கும் (முக்கியமாய் அதிலுள்ள தென்னிந்தியர்க்கும்) எங்கள் சங்கத்தில் ஒரு சிற்றுண்டி அளிக்கப்பட்டது. அப்பொழுது இவர் சீக்கிரம் தம் விடுதிக்குப் போகவிரும்பினார். அதற்குக் காரணம் என்னவென்பதையும் அடியிற்கண்டவாறு விளக்கினார்.

"நாங்கள் இரவில் அதிகமாய்ச் சாப்பிடக் கூடாது. வெகுநேரம் வரையில் கண்விழிக்கக் கூடாது. 9½, 10 மணிக்கே படுத்துக்கொண்டு விடவேண்டும். இல்லாவிடில் நாளை நாங்கள் நன்றாய் ஆடமுடியாது" என்று சொல்லி, தம் சகாக்களை அழைத்துக்கொண்டு போய் விட்டார்.

அன்று நடந்த சிற்றுண்டி விருந்திலிருந்து இவர் நன்றாய்ப் பேச வல்லவரென்பதும், ஹிந்து மத புராண, இதிகாசங்களில் இவருக்குப் பரிச்சயம் உண்டென்பதும் விளங்கின. நிலைமையின் நெருக்கடியைக் குறித்து இவர் மகாபாரதத்திலிருக்கும் கதையொன்றைஎடுத்துச்சொன்னார். அதேமாதிரியான ஒரு நெருக்கடியில் துரோணாசாரியாரை அவருடைய சிஷ்யன் ஒருவன் காப்பாற்றிய கதை அது. இக்கதையை எடுத்துரைத்து அம்மாதிரியே தமக்கும் மறுநாள் ஆட்டத்தில் ஒரு சிஷ்யன் தோன்றுவான் என்று சொன்னார். இவர் எதிர்பார்த்த வண்ணமே முதல்நாள் மண்டையில் அடிபட்ட ஒருவர் மறுநாள் நன்றாய், ஆவேசம் வந்தாற்போல் ஆடி, அதன் பயனாய் இவருடைய கோஷ்டியைத்தோல்வியிலிருந்து தப்புவித்தார்.

எந்தத் துறையிலும் திறமை வாய்ந்தவனுக்கு அழகு அத்துறையில் தனக்கப்புறம் தன்னைப்போல் பிரகாசிக்கக்கூடிய சிஷ்யர்களை உண்டுபண்ணிவிடுதல். இதிலும் இவர் முனைந்திருக்கிறார். இவருடைய இளைய சகோதரரான ஸி. எஸ். நாயுடு என்பவரையும், 'முஷ்டக் அலி' என்னும் ஒருவரையும் தம்மைப்போலவேயே ஆடக் கற்றுக்கொடுத்திருக்கிறார். அவர்களும் குருவின் பெயரைக் கெடுக்காமல் நன்றாய் ஆடிவருகிறார்கள்.

தோற்றத்தில் இவர் கம்பீரமான உயரமுடையவர். இவர் கலந்துகொள்ளும் பந்தயங்களில், இவரை இவருடைய உயரத்திலிருந்தே வெகு எளிதில் கண்டுபிடித்து விடலாம். ஸன்னமான தேகம், நிறம் கறுப்புதான், ஆனால் முகத்தில் நல்ல பொலிவு.

இவர் இந்தூர் என்னும் மகாராஷ்டிர சமஸ்தானத்திலுள்ள ராணுவத்தில் ஒரு அதிகாரியாயிருக்கிறார். அதில் முதலில் 'கேப்டனாக' இருந்தார், நாளடைவில் 'மேஜர்' என்னும் பதவியை யடைந்து, இப்பொழுது 'லெப்டினண்ட் கர்னல்' என்னும் பதவியை வகிக்கிறார். உலகத்திலுள்ள எல்லா தேசங்களிலிருந்தும் சிறந்த ஆட்டக்காரர்களைப் பொறுக்கி யெடுத்து ஒரு 'கிரிக்கட்டு' கோஷ்டியைத் திரட்டினால் அதில் இவருக்குக் கட்டாயம் இடம் உண்டு என்பது பலருடைய கொள்கை. இவரை "*இந்திய பிராட்மன்" என்றும் சொல்லுவதுண்டு.

குறிப்பு:– *பிராட்மன் என்னும் ஆஸ்திரேலிய ஆட்டக்காரர் உலகத்திலேயே இதுவரையில் எல்லோரையும்விடச் சிறந்த 'கிரிக்கட்டு' ஆட்டக்காரர் என்று பெயர்பெற்றிருக்கிறார்.

கண்ணிழந்தோர்

ரா. சந்திரசூடன், புதுடில்லி.

சமூகத்தின் முக்கிய கடமை என்னவெனில் கண்ணிழந்தவர்களுக்கு ஜீவனம் செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும். தற்பொழுது இவ்வித நிர்பாக்கியர்கள் உறவினர்களிடம் சொல்லொணா வேதனைப்பட்டு வாழ்க்கையைக் கடத்துபவர்களாகவும், இன்னும் பெரும்பாலோர் நிக்கற்றுப் பிச்சை எடுத்து உயிர் வாழ்பவர்களாகவும் இருக்கின்றனர்.

கண்ணின் அருமை கண்ணிழந்தோருக்கன்றோ தெரியும்! மனிதனின் உள்ளத்தையும் வெளி உலகத்தின் ஜீவ நாடியையும் பிணைக்கும் பாலம் போன்றது அது. மனம் என்ற ஆராய்ச்சிக்கப்பாலான ஸ்தூலப் பொருளின் பலகணியுமாகும். இந்த உருப்பின் உதவியால்தான் நாம் நம்மைச் சுற்றியுள்ள பொருள்களையும் அவைகளின் தத்துவத்தையும் உணருகின்றோம். உயிர் வாழ்தலுக்குப் பார்வை என்பது உணவிற்கும் சுவாசத்திற்கும் அடுத்த படியான முக்கிய ஸ்தானம் கொண்டது. இவ்வளவு முக்கியமான தனத்தையிழப்பவர்களும், இச் செல்வத்தையே பெறாத துரதிருஷ்டசாலிகளும் பலர் இவ்வுலகில் இருக்கின்றனர். பொதுவுடைமைத் தத்துவம் சிறப்புற்று வளர்ந்து வரும் இந் நாட்களில் பார்வை என்ற உடைமையைக் கொண்டவர்கள் இதில் வறுமையுற்றவர்களை எல்லா விதத்திலும் ஈடு செய்ய முயற்சித்தல் ஒரு கடமை போன்றது.

கண் என்ற பேறு நம் நாட்டில் ஏறக்குறைய பத்து லட்சம் ஜனங்களுக்கு இல்லை. இவர்களை ஒரே இடத்தில் கூட்டிவைக்க முயன்றால் சென்னை போன்ற இடத்தைப் போல் இரண்டு பங்கு விஸ்தீரணம் கொண்ட ஒரு நகரம் வேண்டும். இவ் வறுமை குளிர்ப் பிரதேசங்களைவிட உஷ்ணப் பிரதேசங்களில்தான் அதிகமாக ஏற்படுகிறது என்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. மேலும் கடற்கரைக் கருகாமையில் உள்ளவர்களுக்கு இவ்வித துரதிருஷ்டம் அதிகம் என்றும் தெரிகிறது. கண் பார்வையிழப்பது சூரிய வெளிச்சத்தின் தீக்ஷண்யத்தாலும், பூமியிலிருந்து அதனால் கிளம்பும் புழுதியாலும், நாட்பொழுது நீடித்துத் தூங்கும் அவகாசம் குறைவதாலும் ஏற்படுகிறது. இன்னும் நாம் கண்ணுக்குச் சரிவர சம்ரக்ஷணை செய்வதில் தவறுவதும் ஒரு காரணமாகும். போலி நாகரீக முன்னேற்றத்தில் நாம் கண் நலத்திற்கு அவசியமான உணவுப் பொருள்களை உண்ணாமல் நிராகரிக்கின்றோம். காரோடின் (Carotene) என்ற முக்கிய வைடமின், காரட் (Carrot), பீட் (Beet) கிழங்குகளிலும், சீமைத் தக்காளி (Tomato) போன்ற பொன்னிறங் கொண்ட பழம், காய், கறி வகைகளிலும் இருக்கின்றன. இந்த வைடமின் கண் பார்வைக்கு மிகவும் அவசியம். பிரபல ஆகார சம்பந்தமான ஆராய்ச்சியாளர்கள் இந்த வகையான உணவைச் சமைக்காது பச்சையாக உண்ண வேண்டுமென்றும் போதிக்கின்றனர். அனலில் பக்குவம் செய்தால் காரோடின் என்பது முறிந்துவிடுவதாக ஆராய்ச்சியில் விளங்குகிறது.

குருடு வம்ச பரம்பரையான வியாதியாக வருவது கவனிக்கப்பட்டிருக்கிறது. நெருங்கின உறவில் விவாக சம்பந்தம் கொள்வதால் உற்பத்தியாகும் சிசுக்களுக்கு இந்தக் குறை அதிகமாகப் பீடிக்கிறது என்றும் தெரிகிறது.

இன்னுமொரு காரணம் சிசு சம்ரக்ஷணையில் குற்றம். சிறு குழந்தைகளுக்குக் கண் வீங்குவதோ, இன்னும்

மற்ற சில்லரை உபத்திரவங்கள் கண்ணில் ஏற்படுங்கால், சரியான சிகிச்சை செய்யாது கண்ணிற்கு அதிகமாக உண்டாக்கும் மருந்துகளை உபயோகிப்பது.

கண்பெற்ருேர் கண்ணில்லாதவர்களுக்குச் செய்யவேண்டிய கடமையைச் சிறிது ஆராய்வோம். பிற்போக்கான முறையில் ஆண்டுவரப்படும் நம் நாட்டில் இதுகாறும் குருடப் பிறவிகளுக்கு உதவி செய்ய முன் வந்திருக்கும் ஊழியர்களோ, சங்கங்களோ வெகு சில. தற்சமயம் 'தீப கற்பம்' (Light House) என்ற ஒரு ஸ்தாபனம் வங்காளத்தில் ஏற்பட்டிருக்கிறது. கண்ணில்லாதோருக்கு வாழ்க்கையின் ஒளியைக் கொண்டு கொடுப்பது அதனுடைய முக்கிய கருத்து. உலகத்தில் ஐந்தில் ஒரு பங்கு ஜனத்தொகை கொண்ட இந் நாட்டில் இம்மாதிரி பல ஸ்தாபனங்கள் ஏற்படுவது அத்யாவசியம்.

சமூகத்தின் முக்கிய கடமை என்ன வெனில் கண்ணிழந்தவர்களுக்கு ஜீவனம் செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும். தற்பொழுது இவ்வித நிர்பாக்கியர்கள் உறவினர்களிடம் சொல்லொணு வேதனைப்பட்டு வாழ்க்கையைக் கடத்துபவர்களாகவும், இன்னும் பெரும்பாலோர் திக்கற்றுப் பிச்சை யெடுத்து உயிர் வாழ்பவர்களாகவும் இருக்கின்றனர். இவ்வாறு தாங்கள் செய்த ஒரு குற்றத்திற்காக அவர்கள் வாழ்கை முழுவதும் விவரிக்க இயலாத துயரம் அநுபவிக்கின்றனர்.

சுதந்திரமாக தற்பொழுது வாழ முக்கிய சாதனம் கல்வி. அக் கல்வியை குருடர்களுக்குப் போதித்து அவர்களுக்குச் சமூகத்தில் ஒரு மரியாதை கொண்ட ஸ்தானம் ஏற்படுத்தப் பலர் முயன்று அம் முயற்சியில் ஒருவகையான வெற்றி பெற்றிருக்கின்றனர்.

ப்ரெயில் (Braille) என்பவர் தம் பெயர் கொண்ட ஒரு கல்விமுறை கவனம் செய்திருக்கிறார். அம் முறையில் பலகையில் குளிப்புகள் உண்டு. எழுத்துப் பலகையில் வலத்திலிருந்து இடம் செல்லும் கோடுகள் பலகையின் சமமட்டத்திற்கு மேலெழுந்து நிற்கும். ஒரு முண்டு முதல் ஆறு முண்டுகள் வரை வெவ்வேறு எண்ணிக்கைகளிலும் வெவ்வேறு விதப்பொருத்த ஏற்பாட்டிலும் அமைத்து 63 விதமாகக் கொள்ளலாம். இவற்றுள் உயிர், மெய் எழுத்துக்களும் அதன் பின்னர் முற்றுப் புள்ளி, காமா (Comma) போன்ற குறிகளும் ஒவ்வொருவித ஏற்பாட்டைக் குறிக்கும். இந்த ப்ரெயில் ஏற்பாட்டினல் பல ஆயிரக்கணக்கான குருடர்கள் கல்வி பயின்று வருகின்றனர். ஆனல் இந்த முறை ரோம (Roman) எழுத்துக்கு உகந்ததாக இருக்கிறதே யொழிய ஆரிய, திராவிட எழுத்துக்களுக்கு ஒத்ததாக இல்லை. முயற்சி யெடுத்தால் நம் பாஷைகளுக்குத் தகுந்தாற்போல் ஒரு முறை கண்டுபிடிப்பது அசாத்தியமல்ல.

கல்வி என்பது கண் பெற்ருேரைக் காட்டிலும் கண்ணில்லாதோருக்கு அத்யாவசியம். மனதில் பதியும் பிம்பங்களும், கருத்துக்களும் முக்கியமாக புறக் கண்ணுல்தான் ஏற்படுகின்றன. மற்றைய புலன்களால் ஏற்படுவன சொற்பமே. அதனுல் பிறவிக் குருடுக்கு மனத்திரை சூன்யமாக இருக்கும். அப்படியே பலநாட்களிருந்தால், பின் அவ்வாறுள்ள மூளை வேலைசெய்ய மறுக்கவும் ஹேது இருக்கிறது. கல்வி யளிக்காவிடில் மந்தபுத்தி ஸ்திரமாக நிலைத்துவிடும். சில வீடுகளில் குருடர்களை அங்கு இங்கு நகரச் சொல்லாது செல்லம் கொடுத்து வளர்த்து வருகிருர்கள். இது மிகவும் மதியினம். கண்ணில்லாதவர்களை வேலையில்லாமல் மந்தமாகவும் சோம்பல் கொண்டுமிருக்க அநுமதிக்கக் கூடாது. வீட்டிலும் தெருக்களிலும் ஏதும் தடங்கலின்றி உலாவ அநுமதிக்க வேண்டும். தேகப் பயிற்சியும் மிக அவசியம். தங்களால் எவ்வளவு தங்களுடைய வேலையைச் செய்ய இயலுகிறதோ அவ்வளவுக்கு

அவர்களுக்குச் சௌகரியம் செய்து கொடுத்தல் வேண்டும். மேலும் அவர்கள் நடை, பாவனை முதலியவை களில் தவறு இருந்தால் சமயா சமயம் பார்த்துத் திருத்தல் வேண்டும். கணித சாஸ்திரத்தில் ஊக்கம் செலுத்த முயலு தலும் அவசியம். ஞாபக சக்தியை அதிகரிக்க முயலுவது நல்லது.

இப்பொழுது அவர்களுக்கு ஊழியம் செய்து ஊதியம் திரட்டப் பல்வகைத் துறைகளையும் காண்பிக்க வேண்டும். கண்ணில்லாதோர் எல்லோரும் நன்ருகப் பாடுவார்கள் என்ற ஒரு கொள்கை உலாவி வருகிறது. ஆராய்ச்சிப்படி இது தவறு என்று தெரிகிறது. ஆனல் சங்கீதத்தில் விற்பன்னம் கண்ணிழந் தோரிடம் அதிகமாகக் காண்கின்ரேம். கே. ஸி. டே (K. C. Dey) இதற்கு சான்று. நாம் பல கண்ணிழந்த பிச்சைக்காரர்கள் நன்ருகப் பாடுவதைக் கண்டும் கேட்டு மிருக்கிரேம்.

ஜப்பானில் இம்மக்களுக்கு நரம்புசிகிச்சை (Massage) பழகிக் கொடுக்கப்படு கிறது. இச்சிகிச்சையில் இவர்கள் கை தேர்ந்தவர்களாகின்றனர். மற்றைய சில நாடுகளிலும் இத்தொழில் குருடர்களுக்குக் கற்பிக்கப்படுகிறது. மேலும் குடிசைத்தொழில்களில் பழக்கிவிடுவது மிக்க நலம். பெரிய தொழிற்சாலைகளில் யந்திரங்களுக்கு நடுவே பார்வை யில்லாதவர்கள் வேலை செய்வது மிகவும் கடினம். ஆனல் பெரிய தொழிற்சாலைகளுக்குச் சிறிய தொழிற் கூடங்களும், குடிசைத் தொழில்களுமே வேலைகொடுக்கிறன்றன. வரும் நாட்களில் நம் நாட்டில் கைத் தொழில்கள் அபிவிருத்தியடைய ஏராளமான இடமிருக்கிறது. அக்காலை இத் துர்ப்பாக்கிய மக்களுக்கு ஜீவனவழி அவைகளில் காண்பித்துக் கொடுத்தல் சமூகத்தின் கடமை.

கல்வித் துறையிலும் அவர்களுக்கு வேலை செய்ய அமெரிக்காவில் பல பிரபல கல்லூரித் தலைவர்களும், உபாத்தியாயர்களும் இருக்கின்றனர். கண்ணிழந்தோருக்குப் பாடம் கற்பிக்க கண்ணிழந்த குருதான் உத்தமம் என்பது சிலர் நம்பிக்கை. ஏனென்ருல் கண்ணிழந்தவர் தான் தம் இனத்தாரின் கஷ்டநஷ்டங்களை நன்கு அறிவார் என்றகொள்கை.

இன்னும் வக்கீல்கள், பத்திரிகை ஆசிரியர்கள், நிருபர்கள், டாக்டர்கள், மத குருமார்கள், ரேடியோவில் செய்தி சொல்வோர்போன்ற பலர் அமெரிக்காவில் புறதிருஷ்டியில்லாதவர்கள். பலர் சர்க்கார் உத்தியோகத்திலும் செவ்வையாக வேலைபார்த்து வருகின்றனர்.

இங்கிலாந்தில் சில வருஷங்களுக்கு முன் Mr. Fawcett கண்பார்வையின்றி தந்தி, தபால் தலைவராக (Postmaster-General)வும் மந்திரிசபையில் ஸ்தானம் வகித்தும் வெகுதிறமையாக வேலை செய்திருக்கிருர். ஆனல் இந்தியாவில் குருடர்களை சர்க்கார் வேலைக்கோ, அரசாங்க கல்லூரிகளில் உபாத்தியாயத் தொழிலுக்கோ அனுமதிச்சட்டம் இடம் கொடுப்பதில்லை. மேலும் பலர் சட்ட சபைகளில் இருந்து தமது நாடுகளுக்கு அளவிலாத் தொண்டுபுரிந்து வருகின்றனர்.

உழவுத் தொழிலிலும் பார்வையில்லாதவர்களுக்கு ஊழியம் சம்பாதிக்க சமூகம் உதவிசெய்தல் வேண்டும்.

சில முன்னேற்றமடைந்த நாடுகளில் இவ்வித சமூகத் துர்ப்பாக்கியர்களைப் பாதுகாக்கவும், அவர்களுக்குத் தகுந்த தொழில் கற்பித்து அதன் மூலம் சம்பாதித்துப் பொருளாதார சுதந்திரம் பெறவும் அனுகூலம் செய்யப்படுகிறது. குருட்டுத் தொழிலாளிகள் செய்த சாமான்களைத்தான் அரசாங்கத் தேவைகளுக்கு வாங்க வேண்டுமென்று விதிக்கப்பட்டிருக்கிறது. தொழிற்சாலைகளில் அங்கஹீனம் கொண்டவர்கள் சிலரைக் கட்டாயமாக எடுத்தாக வேண்டு மென்றும் சட்டம் இருக்கிறது.

நமக்கு அதிகமாக ஏற்படப்போகிறது தற்பொழுதைய யுத்தத்திற்குப் பிறகு இந்தக்கவலை; போர்முனைகளிலிருந்து பல ஆயிரம் கண் இழந்து திரும்புவர். அப்பொழுது நம்மை ஆளும் கவலையும் பொறுப்பும் நம்மிடமேவந்துசேர நியாயமுமிருக்கிறது. அக்கால சமூகத்தொண்டுகளில் முக்கியமாகக்கருத வேண்டியது குருடு, கூன், முடம் போன்றவர்களைப் பரிபாலிப்பது. அதற்கு இப்பொழுதிலிருந்தே வீட்டைத் தயார் செய்துகொள்ள வேண்டாமா?

தன் குடும்பத்தில் சம்பாதிக்கிறவர் **இந்த கனவான் ஒருவரே.** அவருக்கு நீண்ட ஆயுளும், நல்ல அதிருஷ்டமும் வரும்படி நாம் பிரார்த்திக்கிறோம். **ஆனால் காலம் மிகவும் நிச்சயமில்லாததாய் இருக்கிறது;** அதனால் அவருக்கு ஏதாவது கெடுதல் நேர்ந்தால், அவருடையகுடும்பத்தை யார் சம்ரக்ஷிப்பது?

“நேஷனல் இன்ஷ்யூரன்ஸ்” தான்

அதில் அவர் இன்ஷ்யூர் செய்திருந்தால்—

நேஷனல் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்,

7, கவுன்ஸில் ஹௌஸ் தெரு, கல்கத்தா.

ஸப் ஆபீஸ் :
171, புதுத்தெரு, மதுரை.

மதருஸ் பிராஞ்சு :
58, கோபதிநாராயணஸ்வாமி செட்டி ரோடு, தியாகராயநகர், மதருஸ்.

ஸப் ஆபீஸ் :
5, கெம்பகோட ரோடு, பெங்களூர்.

சந்தாதார்களுக்கு

பாரதமணி இதழ்கள் உரிய காலத்தில் வந்து சேராவிட்டால், அந்தந்த ஆங்கிலமாத முடிவுக்குள் தெரிவிக்க வேண்டும். இல்லாவிடில் காரியாலயத்தார் ஒன்றும் செய்ய முடியாதென்று தெரிவித்துக் கொள்கிறோம்.

‘பாரதமணி’ காரியாலயத்தார்.

ஆண்பிள்ளைச் சமர்த்து

ஏ. டி. கிருஷ்ணமாச்சாரி, *மயிலாப்பூர்.*

1

இடம்:— மாம்பலத்தில் ரயிலடிக்குச் சமீப மான ஒரு புது வீடு

காலம்:— சனிக்கிழமை காலை 8-மணி

பாத்திரங்கள்:— கணேசய்யர், அவர் சகதர்மிணி விசாலாட்சி

கணேசய்யர்: சமையல் ஆய்விட்டதா? எனக்கு சீக்கிரம் சாதம் போடு; இன்றைக்கு வீட்டைப் பார்க்க ஒருத்தர் வருகிறேன் என்று சொல்லி யிருக்கிறார். நான் காலமேயே போய் ஆபீஸ் வேலையை எல்லாம் முடித்துக்கொண்டு அவர் வருகிறதற்குள் வந்துவிட வேண்டும்.

விசாலாட்சி: ஹூம்! இன்னும் அந்த யோசனை ஒழிந்தபாடில்லையா? மறுபடியும் வீட்டை விட்டுவிட்டு நான் எங்கே போகிறதாம்?

கணேசய்யர்: இதோ பார், பிடிவாதம் பிடிக்காதே. நாம் இந்த வீட்டைக் கட்டிக்கொண்டு குடிவருமுன் பட்டணத்தில் இருந்த இடம் காலியாக யிருக்கிறது. அது ஆபீசுக்கு கிட்டம். இங்கே யிருந்து போகிறதற்கு ரொம்ப நாழி ஆகிறது. பணமும் செலவு. உனக்கும் நான் ஆபீசுக்குப் போய்விட்டால் பேச்சுக்குக்கூட யாரும் துணை யில்லை.

விசாலாட்சி: பின் எதற்காக இங்கே வீடு கட்டினீர்கள்? எத்தனை நாளைக்கு ஒட்டுக் குடித்தனம் பண்ணுகிறது? கிழக்கே நின்றாள், மேற்கே நின்றாள் என்று வீட்டைப் படைத்தவர்கள் சொல்லும்போது எனக்கு எரிச்சலாய் வருகிறது.

கணேசய்யர்: அதெல்லாம் எனக்கும் தெரியும். நான் அப்பவே சொன்னேனோல்லியோ? வீடுகட்டி முடிந்ததும் சுபம்போல கிரகப்பிரவேசம் பண்ணணும் என்று. .... வந்தோம் ஆசைக்கு ஆறுமாதம் இருந்தாச்சு இனிமேல் வாடகைக்கு விட்டால் தான் முப்பது ரூபாயாவது வரும். கடன் வாங்கி வீடு கட்டியிருக்கிறோமே, அது அடையும் வழியைப் பார்க்கவேண்டாமா? ஆபீசிலேயும் போன மாதத்திலே யிருந்து ஐந்து ரூபாய் பிடித்துவிட்டார்கள். மீதி அம்பத்தஞ்சு ரூபாயில் நான் ரயிலுக்கு என்ன கொடுக்கிறது, வயிற்றுக்கு என்ன சாப்பிடுகிறது?.. விசாலம், சொல்லுகிறதைக்கேள். பழையபடி ஒட்டுக்குடித்தனம் பண்ணலாம்.

விசாலாட்சி: நீங்கள் வைச்சா மனசு ஒரே தீர்மானந்தானே. நான் சொன்னால் கேட்கப் போகிறீர்களா? யார் வருகிறதாகச் சொன்னார்கள்?

கணேசய்யர்: அவர் ரொம்ப பெரிய மனுஷர். பெரிய வேலையெல்லாம் பார்த்தவராம். பின்சன் ஆயிருக்கிறதாம். டவுனில் ரொம்ப கூட்டமாயிருக்கிறதென்று ஒதுப்புறமாய் சின்ன வீடாய்த் தேடுகிறாராம். எங்காபீஸ் ஹெட்கிளார்க் சிபார்சு பண்ணினார். நல்ல மாதிரியாம். பிசினாறி அல்லவாம். தோட்டம் துறவு என்றால் நன்றாய் வைத்துக் கொள்ளுவார்களாம். வாடகையும் மாசம் பிறந்தால் கைமேல் வந்து விடுமாம். நல்ல குடித்தனம்.

விசாலாட்சி: என் தலையிலெழுத்து மறுபடி ஒட்டுக் குடித்தனத்தில்தான் அழவேண்டும் என்று எழுதியிருக்கச்சே மாட்டேனென்றால் விடுமோ? சரிசரி, உங்களிஷ்டம். சமையல் ஆயிருக்கு; சாப்பிட்டுப் போங்கள். பிற்பாடு என்னால் கெட்டுப்போச்சு என்று என்னைக் கரிக்க வேண்டாம்.

கணேசய்யர்: ஆமாம், நான்தான் கரிக்கிறவன். நீ ரொம்ப சாது. போதும் மூடு வாயை. எதற்கெடுத்தாலும் சண்டைக்கு நிற்கிறது.

விசாலாட்சி: ஸ்வாமி, உங்களுக்கு அனந்தகோடி நமஸ்காரம். வீடு பார்க்க வருகிறபேர் எதிரே இப்படி எல்லாம் வையாமல் இருங்கோ, உங்களுக்குப் புண்ணியமாய்ப் போகிறது. யாராவது நாலுபேர் பார்த்தால் சிரிக்கப் போறு. நானும் இந்த வீட்டுக்கு வந்து இத்தனை வருஷமாச்சு. ஒரு நல்லது பொல்லாது நான் அறியேன். இத்தனை சாதம், ரெண்டு துணி இதைத்தவிர நான் என்ன கல்லுக்கல்லாய் பூட்டிண்டுட்டேன்? கதவு கதவாய் உடுத்திண்டுட்டேன்? ஒண்ணுமில்லை. இந்த வீட்டிலேயாவது ஹாய்யாய் இருக்கலாமின்னு தான் கல்லே பிடிச்சு மண்ணை பிடிச்சு சுமந்து கொட்டினேன். எதற்கும் கொடுத்துவைக்க வேண்டாமா?

கணேசய்யர்: ஒருவருஷம்போகட்டுமே, அந்தக்கடன் ஐந்தாறு ரூபாயும் உதறித் தள்ளிவிட்டு அப்புறம் வந்திருந்தாப் போகிறது. எதற்கெடுத்தாலும் ஒப்பாரி வைக்கிருயே சரிசரி... போடு சாதத்தை —

[உள்ளே போகிறார்கள்]

2

இடம்:— அதே வீடு
காலம்:— பகல் 12 மணி
பாத்திரங்கள்:— விசாலாட்சி, வீடு கூட்டுகிற அம்மணி

அம்மணி: என்ன அம்மா, இன்றைக்கு ஐயா வெள்ளனவே ஆபீசுக்கு போயிட்டாங்களே!

விசாலாட்சி: யாரோ நம்ம வீட்டுக்கு குடி வருகிறார்களாம். அவர்கள் மத்தியானம் வருவார்கள் போலிருக்கு. அதற்குள்ளே திரும்பி வரவேணுமென்று சீக்கிரமாகப் போறாரம்மா.

அம்மணி: அப்படீன்னு நீங்களெங்கே போறீங்கம்மா?

விசாலாட்சி: போக்கிடம் எங்கே வைச்சிருக்கேன்? போக்கிடமிருந்தால் இப்படிச் சொல்வாரா! வீட்டை வாடகைக்கு விட்டுட்டு மறுபடியும் பட்டணத்தில் போய் ஒட்டுக்குடித்தனத்தில் சாகணும்....என் தலையிலெழுத்து!

அம்மணி: ஏனம்மா? உங்களுக்கு இஷ்டமில்லாட்டி, போகவாணுமே!

விசாலாட்சி: என் இஷ்டமா நடக்கிறது? காசு காசுன்னு ஆண்பிள்ளைகள் காசுக்கே உசிரை விடறேன்னு பொம்மனாட்டி என்னத்தைப் பண்றது?

அம்மணி: வீட்டைக்கட்டி லட்சணமா நீங்க இப்போதான் குடிவந்தீங்க; சுகம்பேர்லே உங்க வூட்டிலே நீங்க இருக்கறத்தே வுட்டுட்டு பொறத்தியாரை வச்சுட்டுப்போனு அவுங்க வூட்டை உங்களாட்டமா பாத்துக்குவாங்களா? உங்களுக்கு என்னம்மா பசங்களா, குட்டியா, பிச்சலா பிடுங்கலா? ஐயா

என்னமோ இந்தவேளைக்கு நல்லா சம்பாதிக்கிறுரு. நீங்க சாப்பிட்டுட்டு நாலுபேருக்குப் போடலாமே?

விசாலாட்சி: ஆமாம். அவருக்கு யார் சொல்றது? ஆச்சு இன்னும் ஒரு நாழிக்கெல்லாம் வீடு பாக்கிற வங்க வரப்போறுங்க.

அம்மணி: ஏம்மா அவங்களுக்கு வீடு புடிக்காட்டி?

விசாலாட்சி: ஏண்டி புடிக்காதே போறது? என்னத்திலே குறைச்சல் தோட்டமாச்சு, பளிங்காட்டமா கூடமாச்சு, ஓயாத ஆகாசகங்கை கொட்றதுகொழா! காத்து தலையை பிச்சிண்டு போறது. கிணற்றிலேயோ இளநீராட்டமா தீர்த்தம். யார்தான் பிடிக்கல்லேன்னுவா?

அம்மணி: எனக்கு ஒரு யுக்தி தோண்றது.

விசாலாட்சி: எதுக்கு?

அம்மணி: ரெண்டொரு வேலை செஞ்சா வீடு பிடிக்காதே வழி செஞ்சுப்பிடலாம்.

விசாலாட்சி: அம்மணி, உனக்கு அரைப்படி அரிசி அளந்து தந்துடறேன், எனக்கு அந்த யோசனையை சொல்லிக்கொடேன்.

அம்மணி: கூடத்தில் நாலு செங்கல்லைப் பேர்த்து எடுத்துவிடுகிறது. குழாயைக் கொஞ்சம் ஒடித்துவிடுகிறது; தோட்டத்தில் நாலு பாத்தியைக் கொத்திவிடுகிறது; கிணற்றில் எண்ணெயை ஊத்திப்புடறது; அவுங்க வரப்போ இதையெல்லாம் காட்டினு ஆடுவானுண்ணுட்டு பூடுவாங்கோ.

விசாலாட்சி: அம்மணி, நல்ல யோசனை சொன்னுய். அப்படியே செஞ்சுடலாம். எதுக்கும் நீயும் கூடவேயிரு. அப்படியே அவாள் வந்து பாத்துட்டு, வீடு வேணுன்னுட்டு போய்ட்டால் உனக்கு அரைப்படி அரிசி மாத்திரம் இல்லே, நீ முந்தாநாள் கேட்டயே, அந்தப் பழம்புடவையைக்கூடத் தந்துடறேன். பாவம் நாலு மாசத்துக்கு நல்லா கட்டிக்கோ.

அம்மணி: அம்மா, இதெல்லாம் நான் சொல்லிக் கொடுத்தேண்ணு ஐயாக்கு தெரிஞ்சுட்டா?

விசாலாட்சி: அதைப்பத்தி நீ பயப்படாதே. பயித்தியக்காரி! நான் உன்னைக் காட்டிக் கொடுப்பேனு? மிஞ்சி ஐயா உன்னை ஏதாகிலும் கேட்டாக்கூட எனக்கொண்ணுந் தெரியாதுன்னு நீ சொல்லிடு.

அம்மணி: அப்படியே அம்மா.

[திரை விழுகிறது]

3

இடம்:— அதே வீடு
காலம்:— பிற்பகல் 2 மணி
பாத்திரங்கள்:— விசாலாட்சி, அம்மணி, கோவிந்தய்யர், லக்ஷ்மி அம்மாள்

கோவிந்தய்யர்: என்ன ரமணீயமான தோட்டம்! சின்னஞ் சிறுக்க வீடு சுற்றித் தோட்டம்; எத்தனை அழகாயிருக்கிறது பார்!

லக்ஷ்மி: நாமா வேணுமென்று கட்டியிருந்தால்கூட இத்தனை அமைவாயிராது. யாரம்மா நீ? வீட்டிலே யாராவது இருக்கிருக்களா?

அம்மணி: நான்தான் இந்த வீடு பெருக்கிறவங்கோ. வூட்லே அம்மா இருக்காங்கோ.

கோவிந்தய்யர்: இதுதானே கணேசய்யர் வீடு?

அம்மணி: ஆமாங்கோ, ஐயா ஆபீசுக்குப் போயிருக்காங்கோ, ஆட்டலே அம்மாதான் இருக்காங்கோ.

லக்ஷ்மி: நாங்க விடு பார்க்க வந்திருக் கோம். அம்மாளிடம் சற்றே சொல்றயா?

அம்மணி: நீங்க வரப்போறீங்கன்னு சொல்லிக்கிணிருந்தாங்கோ. வந்து பாருங்கோம்மா.

லக்ஷ்மி: உள்ளே வாங்கோ, எத்தனை நாழி வாசல்லேயே நின்னுண்டு தோட்டத்தையே பார்த்துண்டு இருப்பது? பிற்பாடுதான் உதயாஸ்த மனம் தோட்டத்திலேயே இருக் கப்போறயள்.... உள்ளே எல்லாம் பார்க்கவேண்டாமா?

கோவிந்தய்யர்: நீ போய்ப் பேசு. நானும் பின்னாலேயே வருகிறேன்.

விசாலாட்சி: வாங்கோ, வாங்கோ அவா ஆபீசுக்கு போயிட்டு 2 மணிக் குள்ளே வரேன்னுட்டுப் போனா. ஆச்சு வந்துடுவா.

லக்ஷ்மி: அதனால் என்ன, இப்போ நீங் கள் தான இருக்கேயள், பார்த்தா போச்சு. உங்க விடு ரொம்ப ஒதுக்கா, குருவியாட்டமாயிருக்கு எங்காத்துக்காரர் பார்த்ததுமே பிடிச்சுப்போச்சுனுட்டார்.... .... தோட்டம்தான்.....

விசாலாட்சி: ஆமாம் கொஞ்சம் அத் துவானம், ஒரு செடி செட்டு நன்னா வராது; சுத்த உப்பு மண்.

லக்ஷ்மி: அதைப்பத்தி கவலையில்லை. எங்க ஆத்திலே அவாளுக்கு தோட்டம் மண்வாசி எல்லாம் கரதலபாடம். அவா நாலுநாள்ளே அதெ சரிப்படுத்துடுவா. ....இது கலியாணக் கூடமோ? லட்சணமாயிருக்கு: சதுரக்கல் தளவரிசை இப்படிதான் போட ணும். சிமிட்டியை போட்டுச் சில பேர் கெடுத்துடறு. அது உடம் புக்கு ஆகாது. சதுரக்கல் பழைய நாள் வழக்கம். ஈரம் தாங்காது. வெயில் காலத்துக்கு ஜில்லென் றிருக்கும். மழைகாலத்துக்குக் கம் மென்றிருக்கும். எங்காத்திலே அவா எப்பவும் செங்கல் தரையிலே தான் படுக்கிறது. சிமிட்டித் தரையின்னு காலடிகூட எடுத்து வைக்கமாட்டா.

விசாலாட்சி: இதிலே அடிக்கடி அலம் பித்தள்ளினல் கல்பேர்ந்துபோறது. நாலஞ்சு செங்கல் பேர்ந்துபோச்சு இதோ பாருங்கோ.

லக்ஷ்மி: இதுதானு பிரமாதம்; எங்காத் திலே இதை யெல்லாம் போட்டு கொல்லனலே இத்தனை சிமிட்டியை வெச்சு கிடிச்சுடுவா. கொல்லற்று வேலேன்னல் அவாளுக்குப் பசி தாகங்கூடத் தெரியாது. என்ன, இதோ பாத்தேளா? உங்களுக்கு அரைநாள் கொத்துவேலை யிருக்கு.

கோவிந்தய்யர்: தங்கமாப் போச்சு அரைப்படி சிமிட்டி வாங்கிண்டு வந்து ஒரு மணி சாவகாசத்திலே பூசிவிடலாம். நமக்குத் தகுந்த விடு தான்னு!

விசாலாட்சி: ஆனல் வாச உள்ளுக்கும் சமயற்கட்டுக்கும் சற்றே தூரம். கூப்பிட்டால்கூட காதுகேட்காது. நான் அப்பவே சொன்னேன். நடுவிலே சமயலுள்ளே போட் டுட்டு அந்தண்டை உக்ராணத்தை வைச்சுக்குவோம் என்று. புருஷாள் நம்ம வார்த்தையைக் கேட்கிறளா?

லக்ஷ்மி: இதுதான் நல்லதம்மா. எங் காத்துலே சதா எதாவது வாசிச் சிண்டே யிருப்பா. அப்போ

அடுக்களை சத்தம் காதில் விழுந்தா எப்படி? சமயற்காரனே இருந்தான் நாம்ப பேசறதெல்லாம் அவன் ஒட்டுக் கேட்டுண்டிருந்தானானல் நன்னாயிருக்குமா? சற்றே தள்ளி யிருக்கிறதுதான் தேவலை.

அர்மணி: குழாயைக் காட்டுங்கோம்மா!

விசாலாட்சி: பார்த்தாயா மறந்தே போனேன். அந்தக்குழா ஒட்டை. தடதட வென்று கொட்டிண்டே யிருக்கிறது. இந்த ஊர் நல்ல பட்டணமுமன்று, நாட்டுப்புறமு மன்று, ரெண்டுங்கெட்டான். இங்கே குழாக்காரனே வரதில்லை.

லக்ஷ்மி: குழா போடரதும் கழட்டற தும் எங்காத்திலே அவாளுக்குத் தண்ணீர்ப்பாடம். நாங்க பெங்களூரிலே குடியிருந்தோம். அந்தாத்திலே பாருங்கோ, இவாளே கையாலே நாலுதடவை குழாயை வெச்சுப் பேர்த்தெடுத்துட்டா. அத்தே ஒரேநாள்ளே சரிப்படுத்திடுவா. என்ன, இந்தக்குழாயைப் பாருங்கோ.

கோவிந்தய்யர்: இதுவா? ஸ்டம்ப் கார்க் பாட்டன்.(Pattern) திருகு தேஞ்சு போயிருக்கு. இப்போ துணியைச் சுற்றி போட்டு வைப்போம். பிற்பாடு வேறே மறை போட்டுக் கொள்ளலாம்.

விசாலாட்சி: (மெதுவாய்) என்னடி அம்மணி? இவா விடாக் கண்டர்களடி. என் தலையெழுத்து ஒட்டுக் குடித்தனத்தில் போய்த்தான் தீரணும்னு இருக்கச்சே உன் குட்டித் தந்திரங்கள் எங்கேடி பலிக்கப்போகிறது. (உரக்க) பக்கத்தில் பள்ளிக் கூடத்துப்பிள்ளைகள் எல்லாம் படிக்கிற மைதானம். சதா இரைச்சலாய்த்தானிருக்கும்.

லக்ஷ்மி: எங்காத்திலே குழந்தைகள் என்றால் கோடிப் பிராணன். கலகலன்னுட்டு குழந்தைகள் விளையாடற சத்தம் இருந்தால் தான் லட்சணமாயிருக்கும். இல்லேன்னா ஒரே ஜயிலில் போட்ட மாதிரியிராதோ திக்கு திக்குன்னுட்டு. நமக்குத்தான் ஸ்வாமி குழந்தை குட்டியைக் கொடுக்கல்லே. பக்கத்திலே அண்டையிலே யாவது அதுகள் வந்து கண்ணிலே படட்டுமே.

விசாலாட்சி: இந்தத் தெருவிலே நாலுப் பாட்டின்னு ஒத்தியுண்டு. சதா விடுவிடா வந்து இந்தத் தைலம் அந்த தைலம் இன்னு பேசிண்டிருப்பா. போன்னாக்கூட போக மாட்டா. தொணதொணப்புக்காரி.

லக்ஷ்மி: என்ன? எத்தனை சந்தோஷம் பார்த்தேளோ? நீங்களுந்தான் எத்தனையோ தைலங்காச்சிறகள். லேகியம் கிளறறகள். உங்களுக்கு ஏதானும் சந்தேகம் வந்ததுன்னா, மருந்து பச்சிலை முறை கிறை, கல்வம், கட்டி தட்டினால் உங்களுக்குச் சகாயத்திற்கு ஒரு பாட்டி யிருக்காளாம்.

கோவிந்தய்யர்: ரொம்பசரி. எனக்கு இந்த விடு எல்லாவிதத்திலும் பிடிச்சிருக்கு.

விசாலாட்சி: கிணற்றுத்தண்ணி எண்ணெய் வாடையாயிருக்கும். அப்புறம் சொல்லவில்லைங்கப்படாது.

லக்ஷ்மி: கிணற்றுத் தண்ணியே நாங்க எடுக்கமாட்டோம். அவாளுக்கு குழா ஜலம்தான் வேணும்பாள். என்ன, எனக்கு கூடத்தான் இந்த ஆம் எல்லா விதத்திலும் பிடிச்சிருக்கு.

விசாலாட்சி: (மெதுவாய்) அம்மணி இனிமேல் பலிக்காதுடீ. (உரக்க) ஐயா வர்றா பாரடி.

அர்மனி: அம்மா, ஐயா வந்துட்டாங்கோ.

கோவிந்தய்யர்: கணேசய்யர்வாள் வாருங்கோ, நீங்க வரத்துக்குள்ளேயே நாங்கள் பாத்தாய்விட்டது.

கணேசய்யர்: மன்னிக்கணும், ஓடோடியும் வந்து கூட உங்களோட சொன்னபடிக்கு 2மணிக்கு வர முடியவில்லை. வீட்டை எல்லாம் பாத்தியளா? தோட்டப், தாரவு, மாடி, கொல்லை, சமயற்கட்டு உக்ராணம் எல்லாம் காட்டினளா?

கோவிந்தய்யர்: எல்லாம் பார்த்தோம் ரொம்ப நன்றாய் வைத்திருகிறீர்.

கணேசய்யர்: இந்தத் தெருவு ரொம்ப சவுகரியமானது.

கோவிந்தய்யர்: தெரிகிறது.

கணேசய்யர்: ஒரு சேதி எங்காத்துகாரி சொன்னளோ இல்லையோ? இதிலே ஒரு பெரிய சவுகரியம் என்னன்ன வீட்டுக்குப் பின்னலேன்ன ரயில்வேஸ்டேஷன்! நீங்க ரொம்ப தூரம் நடக்க வேண்டிய தே யில்லை.

லக்ஷ்மி: ஐயோ, அத்தனை கிட்டவா?

விசாலாட்சி: எட்டிப் பார்த்தாலும் பிளாட்பாரத்தில் மலிகூடத் தெரியும்.

கோவிந்தய்யர் கணேசய்யர்வாள்! இத்தனை நாழி உங்காத்தில் வீட்டு சமாசாரம் எல்லாம் காட்டினர்கள். எங்கள் ரெண்டு பேருக்கும் ரொம்ப பிடிச்சிருந்தது, ஆனல் நீங்க ரயில் என்று சொன்னதும் எங்கள் தீர்மானத்தை மாற்றிக் கொள்ள வேண்டியிருக்கிறது. ஏனென்றல் எங்காத்துக்காரிக்கு ரயில் கூப்பிடுற சத்தத்தைக் கேட்டால் ஒரொரு நாளைக்கு மூர்ச்சை வந்து விடறது..... நரும் என்ன பண்ணலாம், பிராப்தமில்லை. போயிட்டுவரோம்—

[போகிறார்கள்]

அர்மனி: (மெதுவாய்) அம்மா, உனக்கு அதிர்ஷ்டம்தான்.

விசாலாட்சி இல்லேடி! ஆண்பிள்ளைகள் சமர்த்து. உன்னலான யுக்தியெல்லாம் பண்ணேன், என்னலான தந்திரமெல்லாம்சொன்னேன், அவாள் போகிற வழியைக் காணும்..... ஐயர் சாமர்த்தியமாய்ப் பேசி அவாளைப் படிய வைச்சுடலும்னு பார்த்தார். அதுவே கிப்பா முடிந்தது. இதுதான் ஆண்பிள்ளை சமர்த்து!



எல்லா
நோவுகளையும்
தீர்க்கும்
அமிர்தாஞ்சனம்
உத்தமம்
பாரத மணி.

நண்பா! போய்
ஸிரோலின் 'ரோச்'
சாப்பிடு.
இப்பொழுதே
ஸிரோலின்
'ரோச்'
சாப்பிட்டு இருமல்
அல்லது ஜலதோ-
ஷத்தை ஒழியுங்கள்
ஸிரோலின் 'ரோச்'
இருமலையும் ஜலதோஷத்தையும் ஒழிக்கிறது

கிராமாந்தரம்

டி. என். எஸ்.

["ஆனந்தமாக வயலையும் வரப்பையும் கவனித்துக்கொண்டு, பாலும் தயிரும் சாப்பிட்டுவிட்டு நிம்மதியாக இருக்கலாமே... உங்களைப்போல படிச்சவாளுக்குப் பட்டணத்தைவிட நூறு மடங்கு மதிப்பும் கௌரவமும் கிராமாந்தரத்திலே கிடைக்குமே!... பட்டணத்திலே போய் நூறு ரூபாய் சம்பாதித்து 'தூத்திப்பத்து' ரூபாய் செலவிட்டு அடையும் சுகத்தை—இங்கேயே பத்து ரூபாய் சம்பாதித்து அதைக் கொண்டே பெறலாமே!"]

மாலை ஐந்து மணிக்கு ஆபீசிலிருந்து வந்த மூர்த்தி சட்டைகளைக் கழற்றி ஸ்டாண்டில் மாட்டிவிட்டு நாற்காலியிலமர்ந்ததும் விமலா காபியைக் கொண்டு வந்து எதிரிலிருந்த மேஜைமேல் வைத்தாள். மூர்த்தி எப்போதும்போல் 'கலகல' வென்று பேசவில்லை. அவன் முகத்தில் ஆயாசம் குடிகொண்டிருந்தது.

"என் இப்படி யிருக்கேள்? இன்றைக்கு எதாவது கேஸ் தோற்றுப்போய் விட்டதா?" என்று பரிவுடன் கேட்டாள் விமலா.

"கேஸ் தோற்றால் வருத்தப்பட வேண்டியதும், ஜெயித்தால் சந்தோஷப்படவேண்டியதும் கட்சிக்காரனல்லவா? வக்கீலுக்கென்னவந்தது? அதெல்லாம் ஒன்றுமில்லை. நாம் இந்த ஊரைவிட்டு ஓடிப்போகவேண்டிய காலந்தான் நெருங்கி விட்டது."

"ஆ! நிச்சயந்தானா?" என்று திடுக்கிட்டாள் விமலா.

"சந்தேகமில்லாமல்; இதோ அதோ என்றிருந்ததெல்லாம் போய்விட்டது. ஒருவாரத்திற்குள் மூட்டையைக்கட்ட வேண்டியதுதான்."

அருகிலிருந்த நாற்காலியில் அமர்ந்து அப்படியே அசந்து போய் விட்டாள் விமலா. சற்று நேரத்திற்குப் பிறகு அவள் உதடுகள் அசைந்தன. 'அட பாவி!' என்ற வார்த்தைகள் மெல்லிய குரலில் வெளிவந்தன.

"என்? என்னையா வைகிறாய்?" என்று சிரித்துக்கொண்டே கேட்டான் மூர்த்தி.

"ஆமாம். உங்களை வைகிறேன்! அந்த பாழாய்ப்போன ஜப்பான்காரனையும் ஜர்மனிக்காரனையும்தான் வைகிறேன். அவனுகள் நாசமாய்ப் போக........"

"எ அப்பா! நீ பற்களைக் கடிப்பதையும் கைவிரல்களைச் சொடுக்குவதையும் பார்த்தால் எதிரிகள் நேரிலிருந்தால் உடனே பஸ்மமாகி விடுவார்கள் போலிருக்கே?" என்று கலகலவென நகைத்தான் மூர்த்தி.

சிணுங்கினாற் போல் சலுகையுடன் பேசினாள் விமலா. அவளது தொனி வரவர அழுகையை எட்டிப் பிடிக்க வாரம்பித்தது. புடவைத் தலைப்பால் கண்ணைக் கசக்கிக் கொண்டாள்.

"நீங்கள் இத்தனை நாளாய் விளையாட்டுக்குத்தான் சொல்கிறீர்களாக்கும் என்று நினைத்துக் கொண்டிருந்தேன். கடைசியில் அது நிச்சயமாய்ப் போச்சு இந்த ஊரில் இத்தனை நாள் இருந்துவிட்டு இன்னொரு ஊரிலே அதுவும் பட்டிக்காட்டிலே போய் எப்படி இருக்கிறது? என்னாலெ முடியாது"

"அட அசடே! இதுக்கு யாராவது இப்படி வருத்தப்படுவார்களோ? கொஞ்ச நாள் அங்கே போயிருந்தால் யுத்த பயம் தீர்ந்தபின் மறுபடி இங்கே வந்துவிடுகிறது. எல்லாரும் பிறந்தகத்துக்குப் போக வேண்டும் என்று

ஆசைப்படுவார்கள். நீ விசனப் படுகிறாயே! உசுருக்கு மிஞ்சித்தானே மற்றதெல்லாம். எல்லாரையும் போல நாமும் போய்க் கிராமத்தில் கொஞ்ச காலம் நிர்ப்பந்தமா இருக்க வேண்டியது தான்."

"உசிரென்ன வெல்லமா? ஆறிலும் சாவு நூறிலும் சாவுதானே? இருக்கிற வரைக்கும் சுகமாக இருப்போம், கிராமத்தில் போய்க் கஷ்டப்பட இங்கே யாராலிருக்கு? அங்கே தெருவில் நாயும் பூனையும்தான் ஓடும். அஸ்த மித்தால் கும்மிருட்டு. நரிகள் ஊளை யிடும். மழை பெய்தால் வீட்டைச் சுற்றிக் கொல்லையிலும் குட்டையிலும் மடாத்தவளைகள் கூடிக்கொண்டு ரோதனம் வைக்கும். படிக்கப் பத்திரிகைகள் கிடைக்குமா? பார்க்க சினிமா உண்டா? பாட்மிண்டன் கோர்ட்டா, லேடிஸ் கிளப்பா, பீச்சா, ரேடியோவா ஒரு இழவும் கிடையாது. முதலில் நாலு வார்த்தைகள் பேச நல்ல மனிதர்கள்தான் உண்டா? பெட்டிப் பாம்பு மாதிரி அடங்கிக் கிடக்கணும். பாட்டிமார்கள் மகாநாடு தான் ஊரில் அமர்க்களப்படும். என்னை யொத்த பொம்மனாட்டிகளெல்லாம் ஊஸ் ஊஸ் என்று அடுப்பை ஊதிக் கொண்டு வீட்டின் மூன்றாங்கட்டிலோ, மாட்டுக் கொட்டிலிலோ அடைந்து கிடப்பார்கள். ஒரு பிராணியையாவது மருந்துக்குக்கூடக் கண்ணால் பார்க்க முடியாது. அங்கேபோய் நான் எப்படித் தான் இருப்பேன்; நினைத்துப் பார்க்கிற போதே பயமாயிருக்கே!" என்றெல் லாம் மூக்கால் அழுதாள் விமலா.

"இதோ பார் விமலா, ராமன் இருக்கும் இடம் அயோத்தி என்பது போல் காலதேசவர்த்தமானங்களை அனு சரித்து நடந்து கொள்ள வேண்டியது தான். நம்மைப் போல் நகரங்களில் வாழ்ந்த பல குடும்பங்கள் கிராமங் களுக்குப் போயிருக்கின்றன. இன்னும் எத்தனையோ குடும்பங்கள் போகப் போகின்றன. ஆகவே உனக்கு வேண்டிய ஸ்நேகிதர்கள் கிடைப் பார்கள். பத்திரிகைகளுக்கு இப்பொழு தே கிராம விலாஸம் கொடுத்துச் சந்தாக்கள் கட்டிவிடுகிறேன். மற்றும் உனக்கு என்னென்ன வசதிகள் வேண்டுமோ அவையாவும் நான்செய்து தருகிறேன். கவலைப்படாதே. மனதைத் தேற்றிக்கொள். இதோ ஊருக்குக் கடிதம் எழுதியிருக்கிறேன். படித்துப் பார்த்துவிட்டு ஒட்டிக் கொண்டுவா. போஸ்ட் செய்துவிட்டு அப்படியே பீச்சுக்குப் போய் வரலாம்."

என்றெல்லாம் சமாதானப் படுத்தி னான் மூர்த்தி. ஜூபலி ஜப்பான் இரண் டையும் சகஸ்ரநாமம் செய்துகொண்டே ஒருவாறு ஆறுதலடைந்த விமலா கடி தத்தைப் படித்துவிட்டு ஒட்டிக்கொண்டு வந்தாள். இருவரும் கடற்கரை சென்று சீக்கிரம் திரும்பினர்.

* * *

தஞ்சை ஜில்லாவில் குடமுருட்டியின் தென்கரையில் ஆற்றோரம் அழகாக அமைந்த சோலைசூழ் கிராமம் வேலம் பட்டி. கிராமத்தின் வடபுறம் குட முருட்டியும் தென்புறம் வெண்ணாற்றின் சிற்றாறும். கிழக்கே ஆறு மைலுக்கப் பால் வேளூர் கிராமம். மேற்கே ஒன்பது மைல் தூரத்தில் ரெயில்வே ஸ்டேஷன். சுத்தப்பட்டிக்காடு என்று ஒரு ஊரைச் சொல்லவேண்டுமானால் அதற்கு வேலம்பட்டிதான் பூரண யோக்யதை யுடையது. அக்கிரஹாரத்தில் சுமார் நாற்பது வீடுகளுண்டு. எல் லோரும் மிகவும் நல்ல மனிதர்களே. ஆனால் உலகம் இவ்வளவு நவநாகரீகத் தில் மிதந்துகொண்டிருக்கும் இந்தக் காலத்திலும்கூட அவ்வூரார் பண்டைய நாகரீகத்தின் அடிவாரத்திலேயேதான் இருந்து வந்தார்கள். அவர்களுக்கு அது ஸகஜமாகவேதானிருந்தது.

இருபுறமும் நதிகளும், வானளாவும் மரங்களும் கோயில் குளங்களும், பசே லென்று பயிர்கள் நிறைந்த வயல்களும், பசுக்கூட்டம், காளைக் கூட்டங்களும் பிராதஸ்நான ஜபதபாதிகளும், ஸ்வாமி தரிசனம் அசுவத்தப் பிரதட்சிணம் முதலியவைகளும் இவையெல்லா

வற்றையுமே ஜன்ம ஸாபல்யமாகவும் கிராமமே சொர்க்கமாகவும் அங்குள்ளவர்கள் கருதிப் போற்றி வாழ்ந்தனர். ஆனால் நகரவாசத்திலிருந்தோருக்கு அவ்வூர் கசக்கத்தான் செய்யுமோ என்னவோ?

வேலம்பட்டிக் கிராமத்திற்குப் பெரிய மிராசுதார் வேம்புவையர்தான். அவருக்குக் கமலம் விமலம் என்ற இரண்டே பெண்கள். வேம்புவையரின் மைத்துனன் நாகஸ்வாமி பம்பாய் மில்லில் மானேஜர். சிறு குழந்தை முதல் விமலா நாகஸாமியிடமேதான் வளர்ந்தாள். தமிழ் ஆங்கிலம் சங்கீதம் இவற்றில் தேர்ச்சி பெற்றாள். கமலாவுக்கும் விமலாவுக்கும் இரண்டே வயது வித்யாஸம். கமலத்திற்கு பதினைந்தாவது வயதில் கலியாணம் நடந்தது. தமக்குப் பிள்ளையில்லாததால் தம் தங்கை பிள்ளை கோதண்டராமனுக்கே கமலத்தை விவாஹம் செய்து கொடுத்துத் தம் வீட்டோடேயே வைத்துக் கொண்டார் வேம்புவையர். கமலம் எழுத்து வாசனையற்றவள். கோதண்டராமன் நான்காம் வகுப்பு வரையில் படித்தவன். ஆகவே தம்பதிகளின் வித்தைப் பொருத்தம் அமைச்சலாகவேயிருந்தது. மற்றப் பொருத்தங்களிலும் ஒருவொருக்கொருவர் ஈடாகவேயிருந்தனர்.

பக்கத்துக் கிராமத்திலுள்ள ஒரு தனவந்தரின் பிள்ளையை விமலாவுக்காக மற்றொரு வரனாகத் தயார் செய்து வைத்துப் பம்பாய்க்குக் கடிதமெழுதி உடனே விமலாவை அழைத்து வந்தால் இரண்டு கலியாணங்களையும் சேர்த்தே செய்து விடலாமெனத் தெரிவித்தார் வேம்புவையர். விமலா அப்பொழுது கல்யாணமே வேண்டாமென்பதாகவும், அதவா செய்து கொள்வதாயினும் படிக்காத பிள்ளைக்குத் தான் வாழ்க்கைப்பட முடியாதென்று கூறுவதாகவும் நாகஸாமி பதிலெழுதி விட்டான். ஆகவே நாகஸாமி அவன் மனைவி விமலா மூவரும் கமலாவின் கலியாணத்திற்கு முதல் நாள் வந்து மறுநாள் பம்பாய்க்குச் சென்றுவிட்டார்கள். 'இத்தனை காலம் பிரிந்திருந்தது போதும், இனியாவது எங்களுடன் இங்கேயே தங்கிவிடு' என்று எவ்வளவோ தூரம் பெற்றோர் வற்புறுத்தியும் தான் அப்பொழுது மூன்றாவது பாரத்தில் படித்துக்கொண்டிருப்பதாகவும் எப்படியும் ஸ்கூல் பைனல் வரை படித்தே தீரவேண்டுமென்றும் நடுவில் கிராமத்தில் தங்கினால் படிப்பு வீணாகிவிடுமென்றும் கூறிவிட்டு முரட்டுப் பிடிவாதமாக மாமன் கூடவே திரும்ப பம்பாய்க்கே புறப்பட்டுச் சென்றுவிட்டாள் விமலா.

வினாத்தெரியாத நாள் முதற்கொண்டு பதிமூன்று வயது வரையில் பம்பாய் நகரத்திலேயே வளர்ந்து முழுக்க முழுக்க நவநாகரீகத்தில் ஈடுபட்டிருந்த விமலாவுக்கு வேலம்பட்டி ஏதோ ஒரு தனியான பிரதேசம் போலவும் கிராமவாசிகள் மனித வர்க்கத்திலேயே சேராத அபூர்வப் பிரகிருதிகளாகவும் தோற்றமளித்ததால் மூன்று நாட்களும் முள் மேலிருப்பது போலிருந்தது. 'எப்போடா அப்பா இந்த ஊரைவிட்டுப் போவோம்' என்ற அருவருப்போடு வீட்டை விட்டுப் புறப்பட்டவள் ஸ்டேஷனில் வந்துதான் நல்லமூச்சுவிட்டாள். 'இனி எக்காரணம்கொண்டும் கிராமத்தில் அடிவைப்பதில்லை. கிராமவாசிகள் முகத்தில் விழிப்பதில்லை. செய்து கொண்டால் படித்து உத்தியோகஸ்தனாக உள்ள நவயுவனைக் கலியாணம் செய்துகொள்வது, இன்றேல் கன்னிகையாகவே காலம் கழிப்பது' என்றெல்லாம் தீவிர சங்கற்பம் செய்துகொண்டு பம்பாய் சென்ற விமலாவின் பங்கில் தெய்வம் அருள்பாலித்தது. நாகஸாமியின் மைத்துனன் ராமமூர்த்தி எம். ஏ. பி. எல். பாஸ் செய்து வக்கீல் பிராக்டீஸ் நடத்திக்கொண்டிருந்தான். சென்னையில் அவனுக்குச் சொந்த வீடிருந்தது. நாகஸாமியின் முயற்சியால் ராமமூர்த்திக்கும் விமலாவுக்கும் சென்னையிலேயே விவாஹம் நடந்தேறிற்று. வேம்புவையருக்கும் இதில் பூரண சம்மதமே. அது முதல் விமலா மூர்த்தியுடன் சென்னை

யிலேயே குடித்தனம் நடத்தி வருகிறாள். ஆனால் தெய்வத்தின் லீலைகளை யாரால் அறிய முடியும்? விமலா எந்தகிராமத்தைப் புறக்கணித்தாளோ அதே கிராமத்திற்கு இன்று போய்ச் சில காலம் தங்கும்படியான நிர்ப்பந்தம் ஏற்பட்டு விட்டது. பாவம் என்ன செய்வாள் அவள்? மிகுந்த மனவருத்தத்துடன் ரெயிலில் போய்க்கொண்டிருக்கிறாள்.

* * *

"ரொம்பநேரம் ஆய்விட்டதா? மணி எட்டிருக்கும் போலிருக்கிறதே! அப்பவே எழுப்பக்கூடாதா?" என்று கேட்டுக்கொண்டே எழுந்து உட்கார்ந்தாள் விமலா. விடியற்காலம் மாயவம் ஜங்ஷனில் காபி சாப்பிட்டுவிட்டு வண்டி மாறி அசதியால் சற்றே படுத்தவள் நன்றாகத் தூங்கிவிட்டாள். அப்பொழுது மணி பதினொன்று. குழந்தைபோல் "ஊர் வந்துவிட்டதோ!" என்று மறுபடியும் கேட்டாள்.

"இன்னும் ஆறு ஸ்டேஷன் இருக்கு" என்றான் மூர்த்தி.

உடனே எழுந்து கூஜாவிலிருந்த ஜலத்தால் முகத்தைக் கழுவித் தலைக்குத் தைலமிட்டு ஜடை பின்னி முகத்திற்குப் பௌடர் போட்டு பால சூரியனவ்வளவு பரிமாணம் நெற்றியில் கலர் குங்குமத்தை வைத்துக்கொண்டு இன்னும் என்னென்லாயோ தன்னைச் சீர்திருத்திக் கொண்டாள். இடையிடையே மூர்த்தியையும் "தலை சீவிக்கொள்ளவில்லை!" என்று கேட்டுக்கொண்டே தைலம் கண்ணாடி சீப்பு முதலியவைகளை அவன் பக்கத்தில் வைத்தாள். இவள் எழுந்து எழுந்து உட்காருவதையும் பெட்டியை மூடி மூடித் திறப்பதையும் மற்றும் இவளது செயல்களையும் கண்ட வண்டியிலுள்ள பிரயாணிகள் திறந்த வாய் மூடாமல் "இதுவும் ஒரு விநோதமோ!" என்று பார்த்துக்கொண்டேயிருந்தனர். வண்டியும் குறித்த ஸ்டேஷனில் வந்து நின்றது.

விமலாவும் மூர்த்தியும் வண்டியினின்றிறங்குவதற்குள் "வாங்கோ மாப்பிள்ளை, வா விமலா" என்று கூறிக்கொண்டே அங்கு வந்து நின்றான் கோதண்டராமன். அவன் பரமஸாது. ஊத்தை நிறைந்து மேடும் பள்ளமுமாகக் காணப்பட்ட அவனது முப்பத்திரண்டு பற்களும் ஷட்டகரையும் மைத்துனியையும் அவனுடன் சேர்ந்து வரவேற்றன. அவனைக்கண்டதுமே விமலாவின் முகம் தானாகவே சுளித்துக்கொண்டது. வண்டிக்காரன் சாமான்களைக் கொண்டு போய் வைத்தான். மூவரும் வண்டியில் ஏறினர். வண்டி புறப்பட்டது.

கோதண்டுவின் வார்த்தைகளும் உள்ளிருந்து புறப்பட்டன. சளசளவென்று ஒன்றுக்கொன்று சம்பந்தம் இல்லாமல் என்னவோ உளறிக்கொட்டிக் கிளறி மூடித் தலைவேதனை செய்துகொண்டே இருந்தான். மூர்த்தி அவனை லட்சியம் செய்து பதில் சொல்வது விமலாவுக்கு வேண்டியிருக்கவே யில்லை. ஆயினும் என்ன செய்து தொலைப்பது. தலையில் எழுத்தே என்று வாயை முணுமுணுத்துக்கொண்டே எப்போ வீடுபோய்ச் சேருவோமோ என்றிருந்தாள். அவள் அனுப்புக்கேற்றாற்போல் சில இடங்களில் கப்பிரோடு குழிகளில் வண்டி போகும்போது குலுக்கலாய் குலுக்கி அவளது மெல்லிய மேனியை ரணமாக்கிற்று. சில இடம் மணல் ரோடு. அங்கே முதல் நாள் பெய்த மழையால் ஒரே உளை. அதில் வண்டி ஏறியும் இறங்கியும் மாடு இழுக்க முடியாமல் கஷ்டப்படும். இப்படியெல்லாம் பல உபத்ரவம். எல்லாக் கஷ்டங்களையும் சகித்துக்கொண்டு பிற்பகல் மூன்று மணிக்கு ஊரை யடைந்தனர். வண்டி வீட்டு வாசலில் நின்றது.

'பெரிய அகத்து விமலா வெகு நாளைக்குப் பிறகு பிறந்தகம் வருகிறாள்' என்ற செய்தி யறிந்து ஊரார் யாவரும் அவளைக்காண அதிக ஆவல் கொண்டிருந்தபடியால் வண்டி வந்ததும் எல்லோரும் வந்து சூழ்ந்து கொண்டனர். திண்ணைச் சாய்மணையில் சாய்ந்து கொண்டிருந்த வேம்புவையர் அன்புடன் பெண்ணையும் மாப்பிள்ளையையும்

வரவேற்றார். விமலா உள்ளே சென்றாள் மூர்த்தி திண்ணையில் சற்று உட்கார்ந்தான். வேம்புவையரும் மற்றோரும் சென்னை யோக க்ஷேமம் யுத்த விஷயம் முதலியவைகளைப் பற்றித் தெரிந்தவரையில் விசாரித்தனர். மூர்த்தி கர்வமின்றி அடக்கத்துடன் அவர்களிடம் சம்பாஷித்தான்.

உள்ளே சென்ற விமலாவை தமக்கை கமலாவும் தாயாரும் அன்புடன் வரவேற்றனர். பெற்றவள், உடன் பிறந்தவள் என்ற வாத்ஸல்யத்திற்காகமட்டும் அவர்களுடன் ஏதோ வார்த்தையாடினாளே தவிர அவர்களுடைய புடவை கட்டும் தலைவிரி கோலமும் நகையணிந்திருக்கும் லட்சணமும் ஒன்றுமே விமலாவுக்குப் பிடிக்கவில்லை.

* * *

விமலா கிராமத்திற்கு வந்து மாதம் ஒன்றுக்குமேலாகியும் ஊரில் அவளைப் பற்றின பேச்சு ஓய்ந்தபாடில்லை. அவள் தோட்டத்துப் பக்கம் போனால் காலுக்கு ஸ்லிப்பர் போட்டுக் கொள்வதைப்பற்றியும்,புடவையைக் கொசுவம் வைக்காமலும், சரீரம் தெரியக்கூடிய மெல்லிசாக கட்டிக்கொள்வது, கைக்கடியாரம் அணிந்திருப்பது, கையில்லா ரவிக்கை போட்டுக்கொள்வது, மூக்குக்கண்ணாடி தரித்திருப்பது, வைரத்தொங்கல் முதலிய நவீன ஆபரணம் அணிந்திருப்பது முதலிய ஒவ்வொரு விஷயத்தையும் அலசி அலசி வம்பளந்தார்கள். அதையெல்லாம் விட கிராமத்தாரின் கருத்தைக் கவர்ந்தது மூர்த்தியும் விமலாவும் ஸல்லாபமாகப் பஹிரங்கத்தில் சிரித்துப் பேசி விளையாடுவதும் கேரம் போர்டு முதலியன ஆடுவதும் தான்.

மூர்த்திக்குக் கிராமம் பிடித்து விட்டது. மாமனுடனும் ஷட்டகனுடனும் வயல்வெளிகளுக்குப் போய் வரவும் மற்றும் பண்ணை அலுவல்களைக் கவனிக்கவும் தொடங்கிவிட்டான். மாலையில் கிராமத்தாருடன் குளத்திற்குச் சென்று சந்தியாவந்தனம் செய்து கோவிலில் ஸ்வாமி தரிசனம் செய்து வரவும் தலைப்பட்டான்.

விமலாவால் அவ்வளவு லகுவில் தன்னை மாற்றிக்கொள்ள முடியவில்லை. அதிகாலையில் எல்லோரும் எழுந்து ஆற்றங்கரைக்குச் சென்றால், எட்டு மணிக்கு மேலேதான் காலைவேளை. தோசையாவது அடையாவது காபி கிடையாது. பகல் ஒரு மணிக்குப் பத்தியமான சாப்பாடு. மூன்று மணிக்குமேல் சிலநாள் ஏதாவது ஆகாரம் இருக்கும். இரவு எட்டு மணிக்குத் தீர்த்தம் போட்ட சாதம். மழைநாளில் மட்டும் ராத்திரிச் சமையல்.

எண்ணெய் தேய்த்துக்கொண்ட ஸ்ரீகள் குடத்தை இடுப்பில் தாங்கி ஸ்நானத்திற்குத் தெருவோடு ஆற்றுக்குச் செல்வதை ஒருநாள் கண்டாள் விமலா. மிகவும் ஆச்சர்யமாய்ப் போய் விட்டது அவளுக்கு. ஆனால் தினசரி இவள் ஒரு தனி அறையைத் தாளிட்டுக் கொண்டு ஸ்நானம் செய்வதைப் பற்றியோ ஊரார் பரிகசிக்கிறார்கள்.

இப்படியாகக் கிராமவழிக்கும் விமலாவின் போக்குக்கும் மலைக்கும் மடுவுக்குமாக இருந்தது. யாருடனும் கலக்காமல் எத்தனை நாள்தானிருக்க முடியும்? வந்த புதிதில் மூர்த்தியாவது விமலாவோடு இரவும் பகலும் விமலாவோடு இரவும் பகலும் பேசிக்கொண்டிருந்தாள். வரவர அவள் வெளி விவகாரங்களில் ஈடுபட ஆரம்பித்து விட்டாள். பத்திரிகைகள்! அதில் எப்பொழுது பார்த்தாலும் என்னதான் இருக்கும்? அவளுக்கும் அலுத்துப் போகவே யோஜித்துப் பார்த்தாள். மனத்துணிவு கொண்டாள். ஆம் அசாத்திய துணிச்சல்!

நவீன ஆடை யாபரணங்களை மூட்டையாகக் கட்டி ஒரு மூலையில் வைத்தாள். பதினெட்டு முழச் சேலையைக் கொசுவம் வைத்துக் கட்டத் தலைப்பட்டாள். நேர்வகிடிட்டுத் தலைவாரிக் கொண்டாள். கிராமத்தாரோடு ஒட்டிப் பழக ஆரம்பித்தாள். மூக்குக்கண்ணாடி, தொங்கட்டான், கைக்கெடியாரம், ஸ்லிப்பர், கோணல் வகிடு, மாம்பழக் கொடுக்கு முதலியவை நீங்கினதும் கிராமத்தார் கண்களுக்கும் அவள் சாதாரணப் பெண்மணியாகவே தோற்ற

மளித்தாள். அதனலேயே அவர்களின் அளவற்ற பிரியத்திற்குப்பாத்திரமானள். பிராதஸ்நானம் சமையல்வேலை மாலையில் சுவாமி தெரிசனம், அசுவத்தப் பிரதட்சிணம் முதலியவை யெல்லாம் செய்ய ஆரம்பித்தாள்.

ஊர்ப் பெண்களுக்குக் காலையில் படிப்பும் மாலையில் சங்கீதமும் சொல்லிக் கொடுத்தாள். அவள் வேலம் பட்டிக்கு நன்கு தன்னைப் பயன்படுத்திக்கொள்ள ஆரம்பித்து விட்டதால் அவளுக்கு ஆத்ம திருப்தியும் உற்சாகமும் ஏற்படவாரம்பித்தன. அந்த நிலைமையில் கிராமவாழ்க்கையைச் சிந்தனை செய்தபோது இயற்கை வனப்பும், சுக போகங்களும் நிறைந்து கிடக்கும் கிராம வாழ்க்கைக்கு நகர வாழ்வு ஒரு போதும் ஈடாகாது என்பதைத் தன்னலேயே உணர்ந்தாள். விமலாவின் மாறுதலைக் கண்டு மூர்த்தி, வேம்புவையர், கமலா, அவளன்னை, கிராம மகாஜனங்கள், முக்கியமாக அத்தைக் கிழவி அனைவரும் ஆனந்தமும் ஆச்சர்யமுமெய்தினர்.

தினசரிகளில் செய்திகள் வரத்தலைப் பட்டன. "தற்காலிகமாக சென்னைக்கு எவ்வித படையெடுப்பு ஆபத்துமில்லை...." என்று. முன்பு பதைபதைப்புடன் வாரிச் சுருட்டி ஓடிவந்த குடும்பங்கள் பல திரும்பவும் சென்னைக்கே போக மூட்டையைக் கட்டிக்கொண்டு குடியேற ஆரம்பித்தன.

கட்சிக்காரர்களையும், கேஸ் கட்டுகளையும் எத்தனை நாள்தான் விட்டுவைக்க முடியும்? பணம் அல்லவோ குவியும்!.... நிம்மதியாகக் கிராமத்திலே இருந்து விடலாமென்று எவ்வளவோ தோன்றினலும், வரும்படி மோகத்தினல் மூர்த்திக்குச் சபலம் தட்டிற்று. மறுபடி சென்னைக்கே போவதென்று தீர்மானித்து, பிரயாண ஸித்தம் செய்தான்.

ஸஹதர்மிணி ஸ்ரீமதி விமலாவிடம் தீர்மானத்தைத் தெரிவித்தான் மூர்த்தி.

"என், இங்கேயே இருந்து விட்டால் என்ன?...." என்று கேட்டாள் அவள்.

"இங்கேயே தங்கிவிட்டால் சம்பாத்தியம்?"

அவ்வளவுதான்; ஆரம்பித்தாள் விமலா "சாப்பாட்டிற்கு வழி யில்லாதவர்கள் சம்பாதிக்கவேண்டியது அவசியந்தான். அந்தநாளில் ஏதோ படித்தாய் விட்டது. அதற்காக உத்தியோகம் செய்துதானக வேண்டும் என்பது என்ன கட்டாயம்? அப்பாவுக்குள்ள சொத்து எனக்கும் அக்காவுக்கும் தானே? நமக்குச் சாப்பாட்டிற்கில்லையா? எதற்காகச் சென்னைக்குப் போகவேண்டும்? எனக்கு இந்தக் கிராம வாழ்க்கைதான் ரொம்பப் பிடித்திருக்கு. நாம் இங்கேயேதான் தங்கி விடுவோமே! ஆனந்தமாக வயலையும், வரப்பையும் கவனித்துக்கொண்டு நிம்மதியாக இருக்கலாமே!........ உங்களைப் போலே படிச்சவாளுக்குப் பட்டணத்தைப் போல நூறு மடங்கு மதிப்பும் கௌரவமும் கிராமாந்தரத்திலே கிடைக்குமே!.... சொல்வதைச் சொல்லி விட்டேன்.... போகத்தான் வேண்டுமா ?" என்று ஒரு குட்டிப் பிரசங்கம் செய்தாள். வக்கீலின் மனைவி யல்லவா ?

அப்புறம் ? அப்புறமென்ன ! வக்கீலும், 'வக்கீலினி'யின் பேச்சில் மயங்கி ஊரோடு தங்கி விட்டார் !

நான் கண்ட கவிதை

ஸ்ரீ. சுப்ரமண்ய சாஸ்திரி, மயிலாப்பூர்

அவள் ஊற்றி அவனுக்குக் கொடுத்துக் கொண்டிருந்தது வெறும் தண்ணீராகத் தோன்றவில்லை, தண்ணீரின் வாயிலாக அவள் அன்பைத்தான் சொரிந்து கொண்டிருந்தாள். அன்புடன் நழுவி, அவள்இதயமும் அவனிடம்விழுந்துவிட்டது.

சித்திரைமாதக் கடைசி. கடுமையான கோடை. வெய்யிலின் வெப்பம் காலை மணி எழு ஆவதற்கு முன்பே மனிதனை வாட்டியது. வெளியில் தலைகாட்டுவதும் கஷ்டமாக இருந்தது. என்ன செய்வது. கார்யம் முக்கியமானதால் குமாரபாளையத்திலிருந்து செங்கழுந்தூருக்கு புறப்படத் தீர்மானித்துவிட்டேன். மைல் ஐந்துதானே மணியும் ஒன்பதுதான் ஆகிறது, பத்தரைமணிக்குள் போய்ச்சேர்ந்துவிடலாம், அதற்குள்ளவா வெய்யில் அதிகமாகி விடப்போகிறது என்று ஊக்கத்தையே நம்பி புறப்பட்டுவிட்டேன்.

வழியில் பசுமையே இல்லை. இரு பக்கமும் வறண்டு வெடித்த பூமியில் அங்குமிங்கும் காற்று குவித்த உலர்ந்த புல்பூண்டுகளே தென்பட்டன. வெய்யிலில் காய்ந்துகிடந்த மணலிலிருந்து அக்னி ஜ்வாலை வீசியது. ஒரு மைலுக்கு மேல் நடந்து வந்தாகிவிட்டது. கார்யத்தின் அவசரத்தால் திரும்பவும் மனம் துணியவில்லை. விடாமுயற்சியைக் கடைப்பிடித்து மேலும்நடக்கலானேன்.

மீண்டும் ஒரு மைல் செல்வதற்குள் தாகம் நாக்கை வரட்டியது. ஆதித்யன் உஷ்ணத்தைத் தலையால் தாங்கமுடியவில்லை. சூர்யனிடமிருந்து தாபமுற்ற மணலின் கொதிப்பை காலால் சிறிதும் தாளவில்லை; உள்ளங்கால் துவண்டு சுருண்டுவிட்டது. சுற்றிலும் ஓர் கையளவு நிழல்கூடக் காணவில்லை. எங்கு பார்த்தாலும் கொதிக்கும் தரைதான் கண்ணை எரித்தது. என்ன செய்வதென்று அறியாமல் திகைத்து தடுமாறி நடந்துகொண்டிருந்தேன். அதோ என் அதிர்ஷ்டம்தான்; ஸுமார் இரண்டு பர்லாங்கு தூரத்தில் பசுமையான சிறிய மரச்சோலை ஒன்றைக்கண்டேன். தூரத்தில் இருந்தாலும் அதைப்பார்த்ததுமே தளர்ந்த என் அங்கங்கள் புத்துயிர் பெற்றன. ஆவலோடு அதை நோக்கி விரைந்துநடந்தேன். என்னை அறியாமலேயே என்னுள்ளத்தில் ஓர் ஆனந்தம் புகுந்து முன்னே தள்ளிச்சென்றது.

தாமதமின்றிச் சோலையை அணுகிவிட்டேன். அதனிடையே அமைந்திருந்தது ஓர் தண்ணீர்ப்பந்தல். அதைச்சுற்றி அழகிய செடிகளும் கொடிகளும் சூழ்ந்திருந்தன. அதற்கு வெளியில் தென்னை கமுகு முதலிய பல விருக்ஷங்கள் சுவர் போல் அடர்ந்து நின்றன. கோடைக்கு நடுங்கி சுமார் பத்துமைல் சுற்றளவிலிருக்கும் புள்ளினங்களனைத்தும் அங்கேயே ஒன்றாய்க் குவிந்து கொஞ்சிக் குலாவிக் கொண்டிருந்ததுகள். மலர்ந்த மலர்களின் நறுமணம் மனதைக்கவர்ந்தது. வழிப்போக்கர்கள் தண்ணீர்ப்பந்தலில் தாகம் தணித்து இரண்டு மூன்று பேர்களாக மரத்தடியில் களைதீர்த்துக் கொண்டிருந்தார்கள்.

சோலையில் புகுந்ததும் என் சரீரத்தின் தாபம் முற்றிலும் தீர்ந்துவிட்டது. தண்ணீர்ப்பந்தலை அணுகி உள்ளத்தின் தாகத்தை தணிக்க விரும்பினேன். அதை நான் அணுகுமுன் அங்கு நான் கண்ட காட்சி என்னைக் கவர்ந்துவிட்டது. அது என்றும் என்மனதைவிட்டகலாது. அது என்உள்ளத்திலேயேசெதுக்கியதுபோல்

ஆகிவிட்டது. நான் ஓர் ஓவிய நிபுணனாகில் அதைசித்திரித்துக்காண்பித் திருப்பேன்.. என்செய்வது? சொற்களா லாகிலும் அதைத் தெளிவுசெய்கிறேன்.

அழகே உருக்கொண்டு அங்கு நின்றிருந்த ஓர் இளம் பெண்மணியால் தண்ணீர்ப்பந்தல் மேடையே பன்மடங்கு பிரகாசித்தது. அவள் தனது மெல்லிய கையில் தகரக் குவளை ஒன்றை ஏந்தி ஓர் புண்யவானுக்குத் தண்ணீர் வார்த்துக் கொண்டிருந்தாள். யௌவனத்தின் புதுமை பூத்த அவளுக்கு வயது பதினேழு அல்லது பதினெட்டிற்குமேல் இராது. மேடையின் அருகில் தரையில் நின்றுகொண்டு ஓர் மனிதன் தனது கரங்கள் இரண்டாலும் தண்ணீரைத் தாங்கிக் குடித்துக் கொண்டிருந்தான். என் தூண்டுதலன்றியே எனது கண்கள் அக்காட்சியில் புகுந்து அங்கிருந்த விசேஷங்களை ஒவ்வொன்ருய் ஆராய்ந்து அறியத்தலைப்பட்டன.

அவள் ஊற்றி அவனுக்கு கொடுத்துக் கொண்டிருந்தது வெறும் தண்ணீராகத் தோன்றவில்லை. தண்ணீரின் வாயிலாக அவள் அன்பைத்தான் சொரிந்து கொண்டிருந்தாள். அன்புடன் நழுவி அவள் இதயமும் அவனிடம் விழுந்துவிட்டது. நழுவிய இதயத்தை அவனிடமிருந்து திருப்பி எடுக்கத் துணிவில்லாமல் திகைத்து நின்ருள் அவள். அத்திகைப்பினிடையே ஓர் ஸந்தோஷமும் அவளிடம் தென்பட்டது. அது என்ன? ஒருவேளை "தனது இதயத்தையும் அர்ப்பணம் செய்து உபசரிக்கத் தகுந்தவன் தான் அவன்" என்று அவள் எண்ணி இருக்கலாம். "தன் இதயம் போய்விட்டாலும் பதிலுக்கு அவன் உள்ளத்தைக் கைப்பற்றிவிட்டோம்" என்றும் அப் பெண்மணி நினைக்க இடமுண்டு. அல்லது இதயம் கொள்ளைபோய் விடினும் கொள்ளைக்காரனைக் கட்டிவிட்டோம் என்று அக்கட்டழகி கருதுவதிலும் அதிகப் பொருத்தமுண்டு. என்னவாகிலும் அவள் கொண்ட மகிழ்ச்சியின் காரணத்தைத் தீர்மானிப்பது சிறிது கஷ்டம்தான்.

புத்தியைப் பறிகொடுத்துப் பதுமை போல் நின்ற அப்பெண்ணிற்கு குவளையில் நீர் குறைந்தது கூடத்தெரியவில்லை. குவளை பாதி சாய்ந்தவண்ணம் அவள் கரத்திலிருந்தது. தண்ணீர் கம்பிபோல் இலேசாக விழுந்து கொண்டிருந்தது. அது எப்படிப்போதும் கையேந்தி குடிப்பதற்கு? ஒரு நாளும் போதாது. ஆனல் அஞ்சலியில்வைத்த முகத்தைஎடுக்காமல் அவனும் குடித்த வண்ணமிருந்தான். இதென்ன விந்தை? தண்ணீர் விழாமல் கரம் நிறைவது எப்படி? நிறையாத கையைத்தான் எவ்வாறு குடிப்பது?

அவன்குடித்தது தண்ணீரல்ல. அவள் கைநிறைய ஊற்றியது அன்பல்லவா? அதைத்தான் அவன் பருகினன். அவனுடைய நீர் தாகம் அவள்முன் வந்ததுமே தணிந்திருக்கும். அப்பொழுது அவன் உள்ளத்தில் எழுந்தது அளவற்ற அன்பின் தாகம்தான். அதைவேண்டி அவன் அஞ்சலிகாட்டி நிற்கவே இங்கிதம் அறிந்த சிறுமி அன்பைவார்த்தாள். அதைப் பிறர்பார்க்காவண்ணம் தண்ணீரில் கலந்து பகர்ந்தாள். குடிப்பவன் ஸாமர்த்தியம்தான் என்ன! கைவிரல்களைத்தளர்த்தி வேண்டாத தண்ணீரை விலக்கி வழியச்செய்து அளித்த அன்பை மட்டும் ஆர்வத்துடன்பருகினன். அதன் ருசியை அவன்தான் அறிவான். அவன் இதுகாறும் கண்டறிந்த ருசி இதற்கு ஈடல்ல இவ்வின்பவமுதுவார்க்கும் உத்தமியின் முகத்தை நன்றி யறிதலோடுநாடி மேல்நோக்கியவாறு இருந்தன அவன் கண்கள். ஆனல் அப்பெண் முகத்தை சற்று அப்புறம் திருப்பிவைத்துக்கொண்டிருந்தாள். கண்கள்மட்டும் சுழன்று இங்குமங்கும் ஓடித்திரிந்து கொண்டிருந்தன. அவைகளை விடாமல் பின்பற்றியது அவன் பார்வை

அப்பொழுதுதான் யுவகன் அறிந்தான் போலிருக்கிறது. "இப்பெண் எனக்குத் தண்ணீர்வார்க்க வந்தவளல்ல தண்ணீரை ஊற்றிச் சிறு குழந்தையைப் போல் என்னை ஏமாற்றி என்னுள்ளத்தை கடைக்கண்களால் பறித்து எடுத்துவிட்டாள். இதோ என்னுள்ளத்தை கவர்ந்து

செல்லுகின்றன அவள் கண்கள். இத் திருடர்களை நான் விடாமல் பின் தொடர்வேன்" என்று அவன் திருஷ்டி அவள் பார்வையைத் தொடருகிறது. பறித்தெடுத்த செல்வத்தை எங்கு வைப்போம் என்றறியாமல் திகைத்து இங்குமங்கும் ஓடித்திரிகின்றன அவள் கண்கள். பறிகொடுத்த செல்வத்தை எவ்விதம் கைப்பற்றுவோம் என்று எண்ணி பதுங்கிப் பதுங்கி அவைகளைபின்பற்றுகிறது இவன் பார்வை. சுருங்கச்சொல்லில் இவ்வழிப் பறியில் இருவரும் ஏமாற்றமடையவில்லை. இதயத்தின் மாற்றத்தைத்தான் அடைந்தார்கள்

இக்காட்சி என் பார்வையிலிருந்து மறைவதற்குள் என்னை ரஸ ஸமுத்திரத்தில் ஆழ்த்தியது. உலகமே எனக்கு ரஸ வெள்ளமாகத் தோன்றியது. அச்சிறுவன் சிறுமி என்ற வேற்றுமை என்னைவிட்டகன்றது. அவ்விருவர்களும் மெய் மறந்து அனுபவித்த ரஸத்தில் என்மனமும் கரைந்து கலந்து விட்டது. கொஞ்ச நேரத்தில் நான் என்நினைவு அடைந்தேன் என் மனது இந்நிகழ்ச்சியை அநுபவித்த முறையினால் அழிவற்றதாகியது.

இது ஓர் கவிதை அல்லவா? இக் கவிதை அறியாதவனை கம்பனோ காளிதாஸனோ யார்தான் ஆகட்டும் இன்புறச் செய்ய இயலுமா? இக்கவிதையை அநுபவிக்க கோடையில் இன்னும்கானமைல்கள் நடந்தாலும் குற்றமில்லை என்று நினைத்தேன். நான் புறப்பட்ட காரியத்தின் நினைவு என்னை அன்று மாலை வரையில் அணுகவில்லை.

சினம் கொள்வது ஆண்மையாகாது. பொறுமையும் இன்சொல்லுந்தான் ஆண்மை. அவையே வீரனின் லக்ஷணம். சினம் உள்ளவன் ஆற்றலும் தைரியமும் இல்லாதவனாகி விடுவான். எந்த அளவுக்கு மனம் கலங்காமல் இருக்கிறாயோ அந்த அளவுக்குச் சக்தி பெருகுவதை உணருவாய். ஆண்மையற்றவனே துயரப்படுவான். அவனே சினம் கொள்வான். துயரமும் சினமும் உடையவனால் கஷ்டத்தைத் தாங்கமுடியாது. கஷ்டத்தைச்சகிக்க மனோதிடமற்றவன், தோல்வியே அடைவான்.

—ரோம ஞானியார்.

நம்மிடம் கிடைக்கும் தமிழ் நன்னூல்கள்.

1. ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம ஸ்தோத்திரம் ரூ. 1

ஸ்ரீமத் ஆதிசங்கர ஸ்ரீபகவத் பாதர்கள் அருளிய பாஷ்யத்திற்கு தமிழ் அனுவாதம் ஸ்ரீ வே. நாராயணன், M.A., M L., அவர்கள் செய்தது. ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமிகள் அவர்களின் திவ்ய ஸ்ரீமுகமும், மஹாமஹோபாத்யாய ப்ரொபஸர் ஸ்ரீ S. குப்புஸாமி சாஸ்திரிகள் அவர்கள் முகவுரையுடனுங் கூடியது.

2. ஸ்ரீ பஜ கோவிந்தம் ... ... அ. 2

ஸ்ரீமத் ஆதிசங்கர ஸ்ரீ பகவத் பாதர்கள் அருளிய கிரந்தமும் ஸ்ரீ A. S. நடராஜய்யர், B.A., M.L., அவர்கள் செய்த தமிழ் அனுவாதமும், ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் அவர்களின் திவ்ய ஸ்ரீமுகத்துடன் கூடியது.

3. ஸ்ரீ ப்ரச்நோத்தர ரத்ந மாலிகா ... அ 2

ஸ்ரீமத் ஆதிசங்கர ஸ்ரீ பகவத் பாதர்கள் இயற்றியதை ஸ்ரீ காஞ்சீகாமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் அவர்கள் தமிழில் உபதேசித்தது.

4. ஸ்ரீ காமகோடி பீடாதிபதிகளான ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் அருளிய நன்மொழிகள் முதற் புத்தகம் ... .. ரூ. 1-8

5. ,, இரண்டாம் புத்தகம் ... அ. 10

6. ஸ்ரீ உபாஸனி விஜயம் அ. 6

ஸ்ரீமதி எஸ். ராஜம் எழுதியது.

7. யோகம் செய்ய வேண்டுமா? .. ... ரூ. 1

ஸ்ரீ பி. கோதண்டராமன் எழுதியது.

8. அரவிந்தரும் அவரது யோகமும் ... அ. 10

ஸ்ரீ பி. கோதண்டராமன் எழுதியது.

பி. ஜி. பால் அண்டு கம்பெனி,
புத்தக வியாபாரிகள்,
ஆள்வார்பேட் : : சென்னை.

இப்படி ஒரு நிமிஷம்

ரஸமுள்ள
கிராமக் குறிப்புகள்,
இனிய சிறு கதைகள்,
கவிதைகள்,
நாட்டுப்பாடல்கள்
இவற்றிற்கு

'பாரத மணி'

கா. சி. வேங்கடரமணியின்
சுயசரிதம்

'என் கனவு'

தொடர்ந்து வெளிவருகிறது.

நீங்கள்
உங்கள் சந்தாத் தொகையை
அனுப்பிவிடுவதுதானே!

அதிகமில்லை
மூன்றே ரூபாய் வருஷத்திற்கு!

நீங்கள்
நெடுநாளாய் ஆவலுடன்
காணக்காத்திருந்த படம்

காஞ்சனமாலா

நடித்த

வியாழன்
டிஸம்பர்
17 ல

சென்னை - வெலிங்டனிலும்
மற்றும் ஆந்திர தேசம்
தமிழ் நாட்டின் எல்லா
பிரதான நகரங்களிலும்
வெளி வருகிறது

ஜெமினி ரிலீஸ்

ஆந்திரா ஸப் டிஸ்ட்ரிபியூட்டர்ஸ்
சமரியா டாக்கீஸ் டிஸட்ரிபியூட்டர்ஸ்
பெஜவாடா.

ஐ. நா. வி. கார்ப்பொரேஷன்.

ஜே. ஸி. குமரப்பா

அசெம்பிளியிலும், கவுன்ஸிலிலும் மிகச் சாமர்த்தியமானவர்கள், வெகு சாமர்த்தியமாகக் கேள்விகள் கேட்டும் ஒரு சமாசாரமும் வெளிவரவில்லை. ஐக்கிய நாட்டு வியாபார கார்ப்பொரேஷனின் (United Kingdom Commercial Corporation) நோக்கமும், வேலையும் என்னவென்பது இதுவரை சிதம்பர ரகசியமாகவே இருந்து வருகிறது. அதைப் 'படஸ்ய'மாகச்செய்ய ஒரேவழிதான் உள்ளது. அதாவது, இப்போது கார்பொரேஷன் செய்துகொண்டுவரும் வேலைகளை ஆராய்ந்து பார்த்தால் அது எதற்காக எற்படுத்தப்பட்டிருக்கிறதென்பதை ஒருவாறு அறியலாம்.

இன்றுவரை பிரிட்டன் வெளிநாடுகளிலிருந்து தான் வாங்கும் சாமான்களுக்குப் பதிலாக, அந்தந்த நாடுகளுக்கு இரும்பு, நிலக்கரி, எஃகு, மெஷின்கள் முதலியன கொடுத்துவந்தது. மேலும், அந்நாடுகளுக்கு அவசியமான போக்குவரவுச் சாதனங்களும், மற்ற உதவிகளும் செய்து கொடுத்தது. ஆனால் இப்போது, யுத்தத்தினால் பிரிட்டன் அனுப்பிவந்த மேற்கண்ட சாமான்களுக்கு எற்பட்ட நெருக்கடியின் பயனாகவும், கொஞ்சமும் சளைக்காத 'யூ' போட் சண்டையின் மும்முரத்தினாலும், ஒரு இக்கட்டான நிலைமை எற்பட்டுவிட்டது. பிரிட்டிஷார் தாங்கள் வாங்கும் அத்தியாவசியமான சாமான்களுக்குப் பதிலாக, மத்தியக் கிழக்கு (Middle East) நாடுகளுக்கு எவ்வித சரக்குகளும் கொடுக்க முடியவில்லை. ஆதலால் இப்போது அவர்களால் கொடுக்கக்கூடியது, பிரசித்திபெற்ற (Sterling Securities) ஸ்டர்லிங் ஸெக்யூரிடீஸ் தான்.

ஆனால் வெளிநாட்டார் தங்களுடைய விலையுயர்ந்த சாமான்களை, இந்த பேபர் ஸெக்யூரிடிக் கடிதத்திற்குப் பதிலாகக் கொடுக்க இஷ்டப்படவில்லை. அவர்கள் பிரிட்டனிடமிருந்து உபயோகமுள்ள பதில் சரக்குகள் அனுப்பும்படி கேட்கிறார்கள். அவர்கள் கேட்பது நியாயம். ஆனால் நியாயத்தை யார் லட்சியம் செய்கிறார்கள்? பிரிட்டனால் கொடுக்க முடிவது 'பேப்பர் ஜாமீன்'தான்.

மத்திய கிழக்குப் பிரதேசத்திலிருந்து பிரிட்டனுக்கு மிக அவசியமான, எண்ணெய், முக்கியமான விலையுயர்ந்த உலோகங்கள் சில, முதலியன கிடைக்கின்றன. இந்தியாவில் உலோகமே அற்றுப் போய்விட்டாலும் (எல்லாவற்றையும் எற்கனவேயே பிரிட்டிஷார் கொண்டுபோய்விட்டார்கள்; மீதி ஒன்றும் இல்லை) பர்ஸியன் வளைகுடாவைச் சுற்றியுள்ள நாடுகளுக்கு வேண்டிய சாமான்கள் மிகுதியாகக் கிடைத்துக் கொண்டுதான் இருக்கின்றன. ஆகவே தன் உரிமையைப் பிரிட்டன் சுலபமாக இந்தியாவின்மேல் செலுத்தி, பேபர் ஸெக்யூரிடி இந்தியா கட்டாயத்தின் பேரில் ஒப்புக்கொள்ளச் செய்து, இந்தியாவிலுள்ள சாமான்களை, 'யூபோட்' ஆபத்தில்லாத கடல்களின் வழியே எடுத்துச் சென்று, அவற்றை மத்திய கிழக்கு நாடுகளுக்குக் கொடுத்து—அவற்றிற்குப் பதிலாக, தனக்கு அவசியமாக வேண்டிய தங்கம், எண்ணெய், இன்னும் மற்ற விலையுயர்ந்த சரக்குகளை அவர்களிடமிருந்து பிரிட்டன் பெற்றுக் கொள்ளுகிறது. இதை விட்டால் வேறு வழி எது? இந்திய ரிஸர்வ் பாங்கால் (Reserve Bank of India) ஆதரிக்கப்பட்ட ஐக்கிய நாட்டு வியாபார கார்ப்பொரேஷனின் வேலை இதுதான்.

இந்திய ரிஸர்வ் பாங்கியின் சட்ட அமைப்பாளர்கள், ரிஸர்வ் பாங்கியின் சட்டத்தைத் தங்களுக்குச்சாதகமாகவே எற்படுத்திக் கொண்டனர். ஸ்டர்லிங் புலியன் (Sterling, Bullion) ஜாமீன்களை 40 சதவிகிதத்திற்குக் கரன்ஸி நோட்டுக்கள் மூலமாகவே எற்படுத்தி

யிருக்கிறுர்கள். ஆதாவது, 'புலியன்' பாகம் மட்டும் 40 கோடியாகவே நிரந்தர்பாக இருக்கவேண்டும். பேப்பர் ஸெக்யூரிடி பிரிட்டன் கொடுக்க வேண்டிய கடனை மட்டும் காண்பிக்கின்றன. ஆதலால், மிக்க தாதம்மிய முள்ள பேப்பர் ஸெக்யூரிடியும், வெள்ளி தங்க ஜாமீனையும் சமமாகக் கருதுவது பெரிய தவருன காரியம். இந்த ஏற்பாட்டின்கீழ் சட்டப்படி இருக்க வேண்டிய 40 கோடி புலியனை வைத்துக் கொண்டு, ரிஸர்வ்பாங்க் எவ்வளவு தொகைக்கு வேண்டுமாஞலும் கரன்ஸி நோட்டு வெளியிட முடிகிறது. இதற்குப் பதில் காகித ஜாமீன்தான். இது தேசத்தின் நாணயச் செலாவணிக்கு எவ்வளவு அபாயகரமானது என்பது சொல்லத் தேவையில்லை.

1939—40லிருந்து கரன்ஸி நோட்டுக்களின் எண்ணிக்கை முன்பிருந்ததைப் போல இருமடங்கு அதிகமாக்கப்பட்டது. 227 கோடியிலிருந்து 500 கோடியாக்கப்பட்டது. ஆனுல் இதற்கு ஜாமீனுக இருந்த 'புலியன்' 44 கோடியாக இருந்தது. ஸ்டர்லிங் ஜாமீன்மட்டும் 78 கோடியிலிருந்து 325 கோடியாக மாறியது—250 கோடி அதிகரித்தது.

வீணுகச் சொல்லிக்கொண்டே போவதில் பயன் என்ன? பிரிட்டன் 250கோடி மதிப்புள்ள பேப்பர் ஸெக்யூரிடிகளைக் கொடுத்துவிட்டு, அவற்றுக்குப் பதிலாக, எண்ணெய், உலோகங்கள், மற்றும் பல சாமான்களை அடைகிறுர்கள். இராக் முதலிய தேசங்கள் கச்சிதமாகத் தங்களுடைய சாமான்களைக் கொடுத்துவிட்டு பிரிட்னிடமிருந்து தங்களுக்கு வேண்டிய சரக்குகளைப் பெற்றுக்கொள்கிறுர்கள். ஆனுல் காதியற்ற இந்தியா உபயோகமற்ற பேப்பர் ஸெக்யூரிடிகளை வாங்கிக்கொண்டு, தன்னுடைய விலையுயர்ந்த பொருள்களைக் கட்டாயத்தினுல் இழந்து கொண்டிருக்கிறது!

பேப்பர் ஸெக்யூரிடியை தலையில் கட்டிவிட்டு, அதற்கு ஈடாக, அவசியமான சாமான்களைப்பெற ஐக்கிய நாட்டு வியாபாரக் கார்ப்பொரேஷன் பிரிட்டிஷாருக்கு உதவுகிறது. இதிலிருந்து ஐ. நா. வி. கார்ப்பொரேஷன் அநேகமாக பிரிட்டிஷ் கவர்மெண்டின் ஒரு தனி இலாகா என்பது தெரியவில்லையா?

நியாயமான இந்திய வியாபாரத் தொழிலை இந்த கார்பொரேஷன் ஆக்கிரமிக்க முயலுகிறது என்று கதறி, இந்தியன் சேம்பர் ஆப் காமர்ஸ் (Indian Chamber of Commerce) இந்தக் கார்ப்பொரேஷனை நிறுத்திவிட வேண்டுமென்று பிரிட்டனைக் கேட்டுக் கொண்டது. மேலும், இந்தக் கார்ப்பொரேஷன், இந்திய மக்கள் நெற்றி வேர்வை நிலத்தில் சொட்ட உழைத்துத் திரட்டிய சாமான்களுக்குப் பதில் பிரிட்டனின் 'பேப்பரை' இந்தியாவில் கொடுக்க ஒரு நல்ல சாதனமாக விளங்குகிறது.

['ஸோஷல் வெல்பேர்' பத்திரிகை வருஷ மலரில் வெளிவந்தது]

வரப்பெற்றேம்

மதிப்புரைக்காகக் கீழே குறிப்பிட்ட புதிய வெளியீடுகள் கிடைக்கப் பெற்றேம்:

சக்தி காரியாலய நூல்கள்:
1. மானிட ஜாதியின் சுதந்திரம்
2. பிரயாண நினைவுகள்
3. படையெடுப்பு
4. இன்பம் எது
5. இருளின் வலிமை

பி. ஜி. பால் அண்டு கம்பெனி:
1. ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாமம்
2. பஜகோவிந்தம்

இந்தியன் பி. இ. என். நூல்கள்:
1. Whose War?
2. Bengali Literature

சுதேசமித்திரன் பிரசுரம்:
1. தாசு

கலைமகள் பிரசுரம்:
1. இந்துமத ஸாரம்

அல்லயன்ஸ் பிரசுரம்:
1. பிரேம்சந்தின் சிறு கதைகள்

கிருமிகளின் தொல்லை

[இந்தியன் பார்மிங் (Indian Farming) பத்திரிகையில் வெளிவந்தது]

தானியங்கள், பருப்புவகைகள், எண்ணெய் விதைகள் இவற்றைச் 'சேர்' கட்டிக் கெடாமல் பாதுகாப்பதில், எப்போதும், எந்தத் தேசத்திலும் பலவித விஷயங்களைச் சமாளிக்கவேண்டியிருக்கிறது. அதுவும் யுத்தம் ஆரம்பத்திலிருந்து, பொருள்களை அதிகப்படியாக உற்பத்தி செய்கிறோம். ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு சரக்குகளை அனுப்பும் போக்குவரவுச் சாதனங்கள் எவ்வளவோ குறைவான திட்டத்திற்கு வந்துவிடவே, சரக்குகளை அந்தந்த இடங்களிலேயே சரிவரப் பாதுகாத்து வர ஏற்பாடு செய்யவேண்டி வந்துவிட்டது. ஆகையால் முன்னைக் காட்டிலும் இப்போது 'சேர்'கட்டி வைப்பதில் அதிகக் கவனம் செலுத்தவேண்டியிருக்கிறது. சேர்கட்டி வைத்திருக்கும் பொருள்கள் 'சாவி' விழுந்தோ, கிருமி புகுந்தோ, கெட்டுவிடாமல் காப்பது அத்தியாவசியம்.

அரிசிப் புழு (Rice weevil) நெல், கோதுமை இவற்றுக்கு பயங்கரமான உபாதியளிக்கும் விரோதி. துவரை வகைகளுக்கு ஒருவித வண்டுகளால் நாசம் ஏற்பட ஹேது இருக்கிறது.

இவ்வித நாசகாரக் கிருமிகளும் புழுக்களும், தானியச் 'சேர்'களை 'அரித்து'க் கெடுத்து விடாமலிருக்க இந்தியாவில் பலவிடங்களில் தகுந்த பரிகார வழிகளை அநுசரிக்கிறார்கள். காற்று உட்புகாத அடக்கமான உபகரணங்களையும், சாம்பல், பாதரஸம், வேப்பிலை, முதலியவற்றைச் 'சேர்'கட்டும்போது பரத்தியும், இந்தக்கிருமிகளை ஒழிக்க முயலுகிறார்கள்.

எல்லாவற்றையும்விட முக்கியமான ஒரு விஷயத்தில் கவனம் செலுத்த வேண்டும். தானியத்தில் ஈரம் இருக்கக் கூடாது. சொற்ப அளவுக்குமேல் ஈரம் இருப்பது கெடுதல். தானியங்களில் 8-சதவிகிதமும், நிலக்கடலை வகைகளுக்கு 6-சதவிகிதமும்தான் ஈரத்தின் கைப்பு இருக்கலாம்.

'சேரு'க்குள், வெளிப்புறமிருந்து ஈரக் காற்றும், சாறும் புகாமல் ஏற்பாடு செய்யவேண்டும். எலி முதலியவை புகாமல் காபந்து செய்யவேண்டும்.

இன்னொரு முக்கிய விஷயம். சேமித்துக் குவிக்குமுன், தானியம் கூடிய வரையில் சுத்தமாக இருக்கிறதா என்பதைக் கவனிக்க வேண்டும். தானியங்களைச் சேமித்துப் பாதுகாக்கும் விஷயமாகச் சமீபத்தில் கலோனியல் ஆபீசார் (Coloneal Office) 'குடியேற்ற நாடுகளின் உணவுப் பொருள் சேகர" சம்பந்தமாக ஒரு யாதாஸ்து வெளியிட்டு அதைக் குடியேற்றநாட்டு அரசாங்கங்களுக்கு அனுப்பி வைத்தார்கள்.

கிருமிகளைப் பற்றியும், அவற்றை அழிக்கும் முறைகளின் பயனையும், அறிய **இம்பீரியல் கௌன்ஸில் ஆப் அக்ரிகல்ச்சரல் ரிஸர்ச்** நிர்வாகிகளும், **இம்பீரியல் அக்ரிகல்ச்சரல் இன்ஸ்டிட்யூட்** ஸ்தாபனத்தாரும் சில மாகாண கவர்மெண்டுகளும் சேர்ந்து ஆராய்ச்சி செய்வதற்கான ஏற்பாடு ஒன்று சென்ற வருஷம் செய்யப்பட்டுள்ளது.

Edited & Published by K. S. Venkataramani at No 43 Mahadana Street Mayavaram, printed by V. Ramamurthi B. A., at the Mirasdar's Welfare Press 29, Mahadana Street, Mayavaram.